2016 ஆகஸ்ட் 02
செவ்வாய்
விலை: 15/-

ஹிஜ்ரி 1437 ஷவ்வால் பிறை 28 பக்கங்கள் 12 மணி 02 ஒளி 117

NAVAMANI DAILY නවමණි දිනපතා

நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

ஹேரத், மெண்டிஸ் தரப்படுத்தலில் முன்னேற்றம்
12»

05»
தேசிய ஷூரா சபையின் சகவாழ்வை இலக்காகக்கொண்ட பள்ளிவாசல்கள் ஊடான திட்டம்



07»
ஒலுவில் கடலரிப்பும் முஸ்லிம் அரசியலின் இயலாமையும்

1996 - 2016 நவமணி 20

எதிரணி பாதயாத்திரை பரபரப்புடன் நிறைவு

பொலிஸ் எதிர்ப்பையும் மீறி லிப்டன் சுற்றுவட்டத்தில் கூட்டம்

கொழும்பு நகரில் கடும் போக்குவரத்து நெரிசல்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தைக் கடக்கும்போது அரசுக்கு எதிராகவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஆதரவாகவும் கோஷங்களை எழுப்பி, பட்டாசு கொளுத்தி பரபரப்பையும் ஏற்படுத்தினர்.

அரசுக்கு எதிராக கடந்த மாதம் 28ஆம் திகதி கண்டி, கெட்டம்பே பகுதியில் ஆரம்பமான மஹிந்த தரப்பினரின் இந்த ஆர்ப்பாட்ட பேரணியானது மாவனல்லை, நெலும்தெனிய, நிட்டம்புவ ஆகிய பிரதேசங்களைக் கடந்து நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் கிரிபத்கொட பகுதியில் இடைநிறுத்தப்பட்டது.

பின்னர் ஐந்தாவது நாளான நேற்று கிரிபத்கொட பகுதியில் காலை 10.30

11»

■ அ.அருண் பிரசாந்த்

நல்லாட்சி அரசை வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் கடந்த நான்கு நாட்களாக மஹிந்த ஆதரவு அணியினரால் மேற்கொள்ளப்பட்டுவந்த எதிர்ப்பு ஊர்வலமானது, பொலிஸாரின் அனுமதியையும் மீறி நேற்று கொழும்பு, லிப்டன் சுற்றுவட்டத்தில் நிறைவுக்கு வந்தது.

இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்த எதிரணியினர், நேற்று மாலை 4.30 மணியளவில் மருதானையில் அமைந்துள்ள

எதிரணி எம்.பிகளுக்கான மனு நிராகரிப்பு

■ பீ.எப்.எம். றிஷாட்

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பதினொரு பாராளுமன்ற உறுப்பினர்களை நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்கு நீதி மன்றம் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்ற பொலிஸாரின் கோரிக்கையை கோட்டை நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. இந்த உத்தரவினை கோட்டை நீதவான் லங்கா ஜயவர்தன நேற்று பிறப்பித்துள்ளார்.

குறித்த 11 பேரும் நீதிமன்ற

11»

அம்பியூலன்ஸில் பஷில்

■ பீ.எப்.எம். றிஷாட்

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவலை நீதவான் நீதிமன்ற நீதிபதி தம்மிக்க ஹேமபால நேற்று உத்தரவிட்டார்.

அம்பியூலன்ஸ் வண்டியில் முன்னாள் அமைச்சர் கடுவலை நீதிமன்றத்திற்கு நேற்று அழைத்து செல்லப்பட்டிருந்த துடன், அம்பியூலன்ஸ்

11»

இன, மொழி, மத ரீதியான கட்சிகளை தடைசெய்ய முடியாது

உயர் நீதிமன்றம் தீர்ப்பு

■ பீ.எப்.எம். றிஷாட்

இந்நாட்டில், இன மற்றும் மத ரீதியாக பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சிகளை தடை செய்யும் உத்தரவை பிறப்பிக்க முடியாதென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

11»

தடுப்புமுகாம்களில் இருந்தோருக்கு இரசாயன உணவு வழங்கவில்லை

இராணுவப் பேச்சாளர் மறுப்பு

■ அ.அருண் பிரசாந்த்

தடுப்பு முகாம்களில் வாழ்ந்தோருக்கு இரசாயன உணவு வழங்கப்பட்டதாக தற்போது எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கு இராணுவப் பேச்சாளர் ஜயலத் ஜயவீர முற்றாக மறுப்பு தெரிவித்தார்.

இலங்கை என்பது பௌத்த நாடு. இங்கு விலங்குகளுக்கு விஷம் வைப்பதே பாவம் எனக்கருதும் போது நாம் எப்படி மனிதர்களுக்கு விஷம் வைப்போம் என்றும் அவர் தனது ஆதங்கத்தை வெளியிட்டார்.

நல்லிணக்க பொறிமுறை தொடர்பில் மக்களின் கருத்தறியும்

11»

உயர்தர பரீட்சை இன்று ஆரம்பம்



2016ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தர பரீட்சை இன்று முதல் இலங்கை முழுவதும் நடைபெறுகின்றது. எனவே குறித்த பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இம்முறை க.பொ.த. உயர்தர பரீட்சை 2 ஆயிரத்து 204 பரீட்சை மத்திய நிலையங்களில் இன்று முதல் 27 வரை நடைபெறவுள்ளதாக பரீட்சைகள்

11»

உம்ரா வீசாவில் தங்கியிருந்தால் 100,000 றியால் அபராதம் அறவீடு

உம்ரா கடமைக்காக சென்று வீசா முடிவடைந்த பின்னர் சவூதியில் தங்கியிருந்தால் 1 இலட்சம் சவூதி றியால்களை அபராதமாக செலுத்த வேண்டுமென அந்நாட்டு குடிவரவு, குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

11»

அஹதிய்யா மாணவர்களுக்கு விரிவான பாடப்புத்தகங்கள்



■ ஆதில் அலி சப்ரி

அஹதிய்யா தரம் 6-9 மாணவர்களுக்கான விரிவான பாடப் புத்தகங்களை தயாரித்து வெளியிட இருப்பதாக முஸ்லிம் சமய திணைக்கள பணிப்பாளர் எம்.எச்.எம்.ஸமீல் தெரிவித்தார்.

அஹதிய்யா தரம் 6-9 மாணவர்களுக்கான பாடத்திட்டம் கடந்த 2008ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டிருந்தாலும், பாடத்திட்டத்திற்கேற்ற விரிவான பாடப் புத்தகங்கள் இல்லாத குறை காணப்படுவதாலே இவ்வாறு

11»

பல்கலைக்கழக தெரிவில் 8% முஸ்லிம்கள்

கடந்த ஆண்டு பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவான 25,576 மாணவர்களுள் 2073 பேர் முஸ்லிம் மாணவர்களாவர். இது 8 வீத அடைவு மட்டமாகும்.

கடந்த ஆண்டு பல்கலை கழகங்களுக்கு தெரிவான மாணவர்கள் பற்றிய தரவுகள் அடங்கிய

11»

இலங்கை முஸ்லிம்களுக்கு தனிக்கட்சி அவசியமில்லை

பொருளியல்துறை பேராசிரியர் டாக்டர் அமீர் அலி

(அஸ்லம் எஸ்.மௌலானா)

இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு இன ரீதியாக தனியான கட்சிகள் அவசியமில்லை. அவ்வாறான கட்சிகளின் தோற்றத்தினால்தான் இன்று முஸ்லிம்கள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர் என அவுஸ்திரேலிய பல்கலைக்கழக பொருளியல்துறை பேராசிரியரான காத்தான்குடியைச் சேர்ந்த டொக்டர் அமீர் அலி தெரிவித்தார்.

மர்ஹூம் சேர் ராசிக் பரீத் தேசியக் கட்சியில் அங்கம் வகித்துக் கொண்டு, முஸ்லிம் சமூகத்திற்காக ஆற்றிய சேவைகளை விட வேறு எந்த முஸ்லிம் அரசியல் தலைமையும் தனிக் கட்சிகளினால் எதையும் சாதித்து விடவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். அறிஞர் சித்திலெப்பை ஆய்வு மையத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சட்டத்தரணி மர்ஸூம் மௌலானா தலைமையில் அக்கரைப்பற்றில் நடைபெற்ற அரசியல் யாப்பு சீர்திருத்தம் தொடர்பிலான கலந்துரையாடலில் உரையாற்றுகையிலேயே அவர் இவற்றைக் குறிப்பிட்டார். அங்கு அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது;

முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுக்க போராடுவோம் என்று கூறுகின்றார்களே. அப்படி இந்த நாட்டில் மாற்று இனங்கள் அனுபவித்துக் கொண்டு, எமக்கு மறுதலிக்கப்பட்டிருக்கின்ற உரிமைகள் எவை என்பதை யாராவது பட்டியலிட்டு சொல்ல முடியுமா? நிச்சயமாக ஒன்றும் இல்லை. அவரவர் அரசியலுக்கான கோஷங்கள்தான் அவை என்பதை மக்கள் புரிந்து கொள்ள தயாரில்லை. அதனால் இந்த இழிநிலை தொடர்கின்றது.இந்த நாட்டு முஸ்லிம்கள் உணர்ச்சிகளுக்கு அடிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். எதையும் நேர்மையாக சிந்திப்பதற்கு தயாரில்லை. எமது பெறுமதியான இளைஞர்கள் வைராக்கியமிக்கவர்களாக மாற்றப்பட்டிருக்கின்றனர். எந்த விடயத்தை எடுத்துக் கொண்டாலும் பிரிந்து நின்று கோஷமிடவே பழக்கப்பட்டிருக்கின்றோம். இவைதான் முஸ்லிம் கட்சிகளினால் எமது சமூகத்திற்கு ஆற்றப்பட்டுள்ள சாதனைகளாகும்.

இந்த நாட்டில் முஸ்லிம்கள் பூர்வீக குடிமக்கள் என்கின்றோம். நூற்றாண்டு கால பழைமையை சொல்கின்றோம். ஆனால் அதற்கான ஆதாரங்கள் எம்மிடம் உண்டா? எமது வரலாறு எழுதப்பட்டிருக்கிறதா? புராதனக் கதைகள், சட்டத்தின் முன் ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. எமது சமூகம், எமது பிரதேசங்கள் தொடர்பில் முக்கிய விடயங்கள் பற்றிய புள்ளிவிபரங்கள் எம்மிடம் கிடையாது. ஆவணங்கள் இல்லை. அவற்றை சேகரிப்பதற்காக முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதில்லை. ஆனால் கோஷம் மட்டும் எழுப்பிக் கொண்டிருக்கின்றோம்.

பிரச்சினைகள் எழுகின்றபோது நாம் இனத்தை முன்னிறுத்துகின்றோம். அது பிரச்சனைகளை இன்னும் ஊதி பெருப்பித்து பூதாகரமாக மாற்றி விடுகின்றன. நாமும் இந்த நாட்டு பிரஜைகள் என்றே எமது தேவைகளைக் கேட்க வேண்டும். எமது பிரச்சினைகளை நாட்டுப் பிரஜை என்ற ரீதியில் அணுகினால் நீதிமன்றம் கூட எமக்கு சாதகமான தீர்வுகளை பெற்றுத்தரும். அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் முஸ்லிம்கள் அவ்வாறுதான் தமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்கின்றனர். உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு, மாற்று இனத்தவருடன் பகைமை பாராட்டுவதனால் நாம் எதனையும் சாதித்து விட முடியாது. பல்லின சமூகங்கள் வாழ்கின்ற ஒரு நாட்டில், அதுவும் நாம் சிறுபான்மையினராக வாழ்கின்ற சூழ்நிலையில் அனைத்து விடயங்களிலும் மாற்று இனத்தவருடன் கைகோர்த்து செயற்படுவதன் மூலமே அவர்களது அரவணைப்பை முஸ்லிம்கள் பெற்றுக் கொள்ள முடியும். அப்படி ஒரு நிலைமை தோன்றுமாயின் நமக்கு யார் அநியாயம் இழைக்கப்போகிறார்கள்? சிந்திக்காமல் செயற்படுவதனால்தான் நாம் சாதாரண விடயங்களை கூட சாதித்துக் கொள்ள முடியாமல் திண்டாடுகின்றோம். கசப்பாக இருந்தாலும் உண்மைகளை ஏற்றுக் கொள்கின்ற பக்குவம் எம்மிடம் வர வேண்டும்.

முஸ்லிம் தேசியம் பற்றி பேசுகின்றோம். ஆனால் நம்மிடம் போதுமான நிலம் இல்லை என்பதை நாம் அறியாமல் இருக்கின்றோம். நிலம் இல்லா விட்டால் தேசியம் இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் 30 வீதமாக வாழ்கின்ற நிலையில் அவர்களுக்கான நிலம் 03 (மூன்று) வீதம் மட்டுமே உள்ளது. இதனை அதிகரிப்பதற்கோ, இருப்பதை காப்பாற்றுவதற்கோ எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. இது போன்று முஸ்லிம்களுடன் தொடர்புடைய புள்ளிவிபரங்கள் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும். முஸ்லிம் சமூகத்தின் வரலாறு பக்கச்சார்பின்றி தொகுக்கப்பட வேண்டும். நிறுவன ரீதியாக இப்பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.இந்த யதார்த்தங்களை புரிந்து கொண்டு சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு ஐம்பது இளைஞர்கள் முன்வருவார்கள் என்றால் அவர்களை வழி நடத்துவதற்கு நான் தயாராக இருக்கின்றேன் என்றார்.அவரது உரையைத் தொடர்ந்து அவரால் சொல்லப்பட்ட கருத்துக்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கும் அவர் விளக்கமளித்தார்.

மாத்தளை ஸாஹிராவில் பவளவிழா நிகழ்வு நாளை

(மரதன்கடவல ரனீஸ்)

மாத்தளை ஸாஹிரா கல்லூரியின் பவள விழா கொண்டாட்டங்கள் நாளை புதன்கிழமை கல்லூரியின் அதிபர் ஜே.எம்.இக்பால் தலைமையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. அன்றைய தினம் மத அனுஷ்டானங்களுடன் மர நடுகையும் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இக்கல்லூரி 1942ஆம் ஆண்டு ஆகஸ்ட் 3ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் அது தனது 75ஆவது ஆண்டில் நாளை காலடியெடுத்து வைக்கின்றது. இதனை முன்னிட்டு தேசிய மட்டத்திலும் பாடசாலை மட்டத்திலும் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளும் விசேட நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பவள விழா ஏற்பாட்டுக்குழு தெரிவித்தது.

சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ஏ.எல். தின நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்லூரி அதிபர் திருமதி அபீரா சலீம் வரவேற்கப்படுவதனையும் அகில இலங்கை ரீதியிலான வரைதல் போட்டியில் வெற்றியீட்டிய மாணவி ஒருவர் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுவதனையும் காணலாம். **(படம்- ஜெஸ்மி எம்.மூஸா)**

கம்பஹா மாவட்டத்திலே அதிக விபத்துக்கள்

(மினுவாங்கொடை நிருபர்)

இலங்கையில் ஆகக்கூடுதலான வீதி விபத்துக்கள் கம்பஹா மாவட்டத்திலேயே இடம்பெறுவதாக தொற்றா நோய்கள் தொடர்பிலான கம்பஹா மாவட்ட நடவடிக்கை மற்றும் திட்டமிடல் கமிட்டியின் விசேட வைத்தியர் டாக்டர் சமித்த சிறிதுங்க சுட்டிக்காட்டினார்.

கம்பஹா மாவட்ட திட்டமிடல் கமிட்டிக்குழுவின் விசேட கூட்டம் அண்மையில் கம்பஹாவில் இடம் பெற்றபோதே அவர் இதனைத்தெரிவித்தார். வீதி விபத்துக்கள் இடம் பெறும் மாவட்டங்களில் கம்பஹா மாவட்டம் முன்னணியில் இருப்பதாகவும் 2015 ஆம் ஆண்டு மாத்திரம் 2,816 மரணங்கள் சம்பவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒரு நாளைக்கு அவசர விபத்துக்களால் 8பேர் வரை உயிரிழக்கின்றனர். பாரிய வீதி விபத்துக்களால் 2500 பேர் வரை மரணிக்கின்றனர்.

இதுவரை நாடளாவிய ரீதியில் 37000 க்கும் அதிகமான வீதி விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் இதில் 9615 மோட்டார் சைக்கிள் விபத்துக்களாகவும் 6,879 முச்சக்கரவண்டிகளால் ஏற்படும் விபத்துக்களாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாதர் அபிவிருத்தி நிலையத்தின் 30வது வருட பூர்த்தி விழா

(வத்துகாமம் நிருபர்)

கண்டியை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் மாதர் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் 30 வது வருட பூர்த்தி விழா மற்றும் அதன் ஸ்தாபகர் பேர்ல் ஸ்டீவன் அம்மையாரின் நினைவு தினம் என்பன நேற்றுமுன்தினம் கண்டியில் கொண்டாடப்பட்டது.

இதன் போது மறைந்த அம்மையார் பேர்ல் ஸ்டீபனின் குண நலன்களைப் பாராட்டி மாதர் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் அக்கரைப்பற்றுக் கிளையால் வாழ்த்துப் பத்திரம் ஒன்று கையளிக்கப்படுவதையும். பேர்ள் ஸ்டீபன் புலமைப்பரிசில் கண்டி தர்மராஜ கல்லூரியில் க.பொ.த. உயர்தரத்தில் கல்வி பயிலும் நீர்கொழும்புப் பிரதேச மாணவன் சத்துரங்க பண்டாரவுக்கு வழங்கப்பட்டது.

அக்கரைப்பற்று பாயிஸா மகாவித்தியாலயத்தில் ஒருவருட கற்பித்தல் பயிற்சியை பூர்த்தி செய்த கட்டுரு பயிலுனர் ஆசிரியர்களுக்கான பிரியாவிடை வைபவம் அண்மையில் இடம்பெற்றபோது அதிபர் எம்.ஏ.ஏ.இஸ்ஸதீன், பகுதித் தலைவர்களான திருமதி எச்.யூ.சாலிம், எம்.தாஹிர் ஆகியோருடன் பயிலுனர் ஆசிரியர்கள் 4 பேரும் இணைந்து எடுத்துக் கொண்ட படம்.

(படம்:-இறக்காமம் நிருபர்)

சுயதொழில் முயற்சிக்கு கடன் வழங்க நடவடிக்கை

(பொலன்னறுவை ஏ.றபீக்)

பொலன்னறுவை மாவட்டத்தில் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் பெண்களுக்கு சுய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு தலா ஐம்பதாயிரம் ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதற்காக பிரதேச செயலாளர் பிரிவு தோறும் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் பெண்களை இனம் காணும் பணியை பிரதேச செயலாளர் அலுவலகங்கள் முன்னெடுத்து வருவதாக வடமத்திய மாகாண உறுப்பினர் எஸ்.எச்.எம். அன்சார் தெரிவித்தார்.

தமன்கடுவ திபுளாக்கல ஹங்குராங்கொடை, வெலிகந்தை, லங்காபுர, மெதிரிகிரிய, எலவிஹார, ஆகிய பிரதேசசெயலாளர் பிரிவுகள் தோறும் உள்ள 295 கிராம சேவகர் பிரிவுகள் ரீதியாக இனங்காணப்பட்ட வறிய பெண்களுக்கு சுயதொழில் முயற்சிகள், கொடுப்பனவுகள் வழங்க சமூக சேவைகள் நிணைக்கள அதிகாரிகளுடன் இணைந்து சுயதொழில் முயற்சி தொடர்பான விபரங்கள் சேகரித்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் படைப்பாக்க செய்திகளை வெளிக்கொண்டு வர வேண்டும்

ஊடகவியல் கல்லூரி விரிவுரையாளர் எஸ்.ரி.ஸ்ரீபிருந்திரன்

(ஏ.எல்.எம்.வினாஸ்-பெரியநீலாவணை நிருபர்)

அரசியலும் ஊடகமும் ஒரு நாயணத்தின் இரு பக்கங்களாகுமென இதழியல் விரிவுரையாளர் ஸ்ரீபிருந்திரன் குறிப்பிட்டார்.

பிராந்திய ஊடகவியலாளர்களுக்காக சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஏற்பாடு செய்த நிலையான சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தினை ஊக்குவித்தலில் ஊடகத்தின் வகிபங்கு தொடர்பான பயிற்சி செயலமர்வு கல்முனை சுப்பர் ஸ்டார் ஹோட்டலில் (30, 31) இரு தினங்கள் நடைபெற்றது. இங்கு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

அரசியலும் ஊடகமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றதாகும். இவை ஒன்றோடு ஒன்று தங்கியுள்ளது. இன்று அச்ச ஊடகங்களின் முன்பக்க செய்திகளை பார்த்தால் அரசியல் தலைவர்களின் கருத்துகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுவதை காணுகின்றோம். நீங்கள் அனுப்பும் செய்திகள் முன்பக்கச் செய்தியாக வராமல் திட்டமிடப்பட்டு புறக்கணிக்கப்படுவதில்லை. கால மாற்றத்துக்கு ஏற்ப பெறுமானங்களின் அடிப்படையில் முக்கியத்துவம் கருதியே செய்திகள் வெளியிடப்படுகிறது. இதனை ஊடகவியலாளர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

நிலைமாறுகால நீதி தொடர்பான படைப்பாக்கச் செய்திகளை ஊடகவியலாளர்கள் வெளிக்கொண்டு வந்து சிறந்த ஊடக கலாசாரத்தை உருவாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்த வதிவிட செயலமர்வில் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் சட்டத் தணி கே. ஜங்கரன் உட்பட 40 ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

கஹட்டோவிட்ட மைதானத்திற்கு சாபி ரஹீம் நிதியுதவி

(கஹட்டோவிட்ட நிஷ்மி)

கஹட்டோவிட்டவில் நீண்ட காலமாக இருந்த குறைபாடொன்று மேல் மாகாண சபை உறுப்பினர் சாபி ரஹீமின் பங்களிப்பினால் தீர்க்கப்பட்டிருக்கிறது.

கம்பஹா மாவட்டத்திலுள்ள கஹட்டோவிட்ட கிராமத்தில் பொது மைதானம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. ஊரிலுள்ள நலன் விரும்பிகளின் அயராத முயற்சியினால் மைதானத்திற்கான காணிக்குரிய விலையில் குறிப்பிட்ட தொகை வசூலிக்கப்பட்டு, முற்பணமாக செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் மேல் மாகாண சபை உறுப்பினர் சாபி ரஹீம் ஏற்கனவே உறுதியளித்ததன் பிரகாரம் ரூபா 100,000 நிதியுதவியினை வழங்கிவைத்தார். அத்தோடு அவர் உரையாற்றுகையில், கஹட்டோவிட்ட பிரதேசமானது முஸ்லிம் காங்கிரசின் கோட்டைகளில் ஒன்று. பல விளையாட்டுக் கழகங்களை உள்ளடக்கிய இவ்வூரில் விளையாட்டு மைதானம் இல்லாமை கவலைக்குரியது. எதிர்காலத்திலும் இந்த மைதானத்திற்காக என்னால் முடிந்ததை செய்வேன். என்று கூறினார்.

இந்நிகழ்வில் முஸ்லிம் காங்கிரசின் அதிஉயர்பீட உறுப்பினர் ஜவ்ஸி, கஹட்டோவிட்ட கிளை ஒருங்கிணைப்பாளர் சரூக் உட்பட மைதான கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் ஊர் மக்கள் கலந்து கொண்டனர்.

தடைகளை உதறித்தள்ளி கட்சி முன்னேற்றத்துக்கு உழைக்கவும்

ஆதரவாளர்களுக்கு ரவூப் ஹக்கீம் அழைப்பு

பின்னோக்கிப் பார்த்து காலம் கடத்தாது, கட்சியின் இயக்கத்திற்கு முட்டுக் கட்டை போடக் கூடிய செயல்களை உதறித் தள்ளி, கட்சியின் முன்னேற்றம் கருதி உற்சாகத்தோடு பயணிக்க முன்வர வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்னெடுத்துள்ள வீட்டுக்கு வீடு மரம் செயல் திட்டத்தை திங்கட்கிழமை (01) கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் திருகோணமலை, கந்தளாய், பேராறு, முதலாம் கொலனியில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் முன்னெடுக்கப்பட்டுள்ள வீட்டுக்கு வீடு மரம் எனப்படும் கட்சிப் பணியின் மூலம் எமது கட்சியின் இளம் போராளிகளை ஒன்றிணைத்து, கட்சியின் வரலாற்றுப் பின்னணியை நன்றாக விளங்கி, புதிய உத்வேகத்தோடு முன்னோக்கிப் பயணிக்கின்ற உற்சாகமான தருணத்தில் இன்று கந்தளாயில் நாம் ஒன்று திரண்டு இருக்கின்றோம்.

இத்திட்டத்தின் மூலம், கட்சி குறித்த பூர்வீகம், கொள்கை, பின்னணி, சவால்கள் போன்றவற்றை நினைவுபடுத்திக் கொள்ளவும், கட்சியின் மூத்த போராளிகளை அடையாளம் கண்டுகொள்ளவும் ஏதுவான செயற்திட்டமாக இதனை பார்க்கின்றேன். கடந்த ஆட்சி வரையில் வன் செயல்களாலும், அட்டூழியங்களாலும் எமது கட்சிக்காக எத்தனையோ பேரை இழந்திருக்கின்றோம். ஒரு சந்தர்ப்பத்தில், அச்சமும் அச்சுறுத்தலும் நிலவிய கால கட்டத்தில் தேர்தல் வேட்பாளர் மனுவை எனது மேற்சட்டையின் உள்ளே மறைத்து வைத்துக்கொண்டு திருகோணமலை கோட்டைக்குள் அமைத்துள்ள மாவட்ட செயலகத்திற்குச் சென்று கையளித்தேன்.

இந்த வீட்டுக்கு வீடு மரம் செயற்றிட்டத்தின் பயனாக ஒவ்வொருவருடைய வீட்டு முற்றத்திலும் நடப்படும் மரக் கன்று வளர்ந்து விருட்சமாகி பயனளிப்பதை போல், எமது கட்சியும் வீட்டில் வசிக்கக் கூடிய ஒவ்வொருவருடனும் இணைந்து அவர்களின் தேவைப்பாடுகளையும், பிரச்சினைகளையும், விசாரித்தறிந்து அவர்களை முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்லும். அவர்களுக்கு கட்சியுடனான தொடர்பாடலை மேலும் அதிகரிக்கவும் இது வழிகோலும் என்றார்.

இந்நிகழ்வில், திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர், முன்னாள் கிழக்கு மாகாண சபை தவிசாளர் சட்டத்தரணி பாயிஸ், கந்தளாய் அமைப்பாளர் ஜெசீல் மௌலவி, கட்சியின் உயர்பீட உறுப்பினர் பஸீல் பீ.ஏ, நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை செயலாற்றுப் பணிப்பாளர் ஹிலால் டி சில்வா ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மூன்று அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள் நியமனம்

அமைச்சரவை அந்தஸ்துள்ள மூன்று அமைச்சுக்களுக்கு புதிதாக செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.அபேகோனிடமிருந்து தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர்.

வெளிவிவகார அமைச்சு, பொதுநிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு, தபால் சேவைகள் முஸ்லிம் சமய அமைச்சு ஆகிய 3 அமைச்சுக்களுக்கே புதிதாக செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளிவிவகார அமைச்சின் புதிய செயலாளராக எசல வீரகோன் நியமிக்கப்பட்டுள்ளார். நாட்டின் இராஜதந்திர சேவையில் உள்ள சிரேஷ்ட அதிகாரியான எசல வீரகோன் 1988இல் வெளிவிவகார சேவையில் இணைந்துகொண்டதுடன், அவர் பல நாடுகளில் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பொதுநிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் புதிய செயலாளராக ஜே.ஜே.ரத்னசிறி நியமிக்கப்பட்டுள்ளதுடன், தபால் சேவைகள் முஸ்லிம் சமய அமைச்சின் புதிய செயலாளராக டீ.ஜீ.எம்.வீ. ஹபுஆரச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.நியமனக் கடிதங்களை வழங்கிவைத்ததன் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதிதாக நியமனம் பெற்றுள்ள செயலாளர்களுடன் சுமூகமான ஒரு கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

மலேசிய இஸ்லாமிய ஆய்வாளர் அப்துல் காதிர் இலங்கை வருகை

(கஹட்டோவிட்ட ரிஸ்மி)

மலேசியாவைச் சேர்ந்த இஸ்லாமிய ஆய்வாளரும், எழுத்தாளரும், கல்வியாளருமான அஷ்ஷெய்க் செய்ஹ் முஹம்மத் அப்துல் காதிர் அல் அஸ்ஹரி இவ்வார இறுதியில் இலங்கை வர உள்ளார்.

வார இறுதிநாட்களில் இலங்கையில் இடம்பெறவுள்ள நிகழ்வுகளில் இவர் பங்கேற்கவுள்ளார். இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளர் எம்.இஸட். அஹமத் முனவ்வரின் இலங்கை வானொலி முஸ்லிம் சேவை என்ற நூல் வெளியீட்டு விழா, கஹட்டோவிட்ட பாதிபிய்யா அரபுக்கல்லூரியின் பட்டமளிப்பு விழா, வெல்லம்பிட்டிய பகுதியில் இடம்பெறவுள்ள அரபுக்கல்லூரிக்கான அடிக்கல் நாட்டு விழா, உலக அமைப்பை இலங்கையில் ஆரம்பித்தல் போன்ற நிகழ்வுகளிலும் இவர் பங்கேற்கவுள்ளார்.

இந்தியாவின் தாருல் உலூம் தேவ்பந்த், யுனிவர்சிட்டி ஸயன்ஸ் மலேசியா, எகிப்தின் அல் அஸ்ஹர் ஆகிய பல்கலைக்கழகங்களின் பட்டதாரியும் ஆவார். இவர் தமிழ், அரபு, உருது, ஆங்கிலம், பார்ஸி உட்பட்ட எட்டு மொழிகளில் நிபுணத்துவம் பெற்றுள்ளார்.

இவர் உலக தீன் துன்யா ஆகிரா அமைப்பின் ஸ்தாபகத் தலைவராவார்.

சன்மார்க்கம் உலகளாவிய பணிகள், மறுமை ஆகிய பிரிவுகளை இலக்காகக் கொண்டு செய்ஹ் முஹம்மத் அப்துல் காதிர் அல் அஸ்ஹரி தலைமையிலான அமைப்பின் மூலம் கிழக்காசியா உட்பட பல நாடுகளில் சேவைகளை ஆற்றிவருகின்றார்.

பொலிஸ் திணைக்களத்தின் 150 ஆவது வருட பூர்த்தியினை முன்னிட்டு அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தினால் நடாத்தப்பட்டுவரும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சித்திரப்போட்டி நேற்று முன்தினம் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் நடைபெற்றது. இதன்போது மாணவர்கள் சித்திரம் வரைவதனையும், பொலிஸ் உத்தியோகத்தர்கள் அருகில் நிற்பதனையும் படங்களில் காணலாம். (படம் - ரியாஸ் ஆதம்)

பஸ்களுக்கு கொடுப்பனவு அட்டைகள் அறிமுகப்படுத்த நடவடிக்கை

எதிர்வரும் 3 மாதங்களில் இலங்கை போக்குவரத்து சபை பஸ்களுக்கு கொடுப்பனவு அட்டைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் போக்குவரத்து பிரதி முகாமையாளர் ராஜா குணதிலக்க தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பஸ் கட்டண மறுசீரமைப்பில் குறைந்தபட்ச பஸ் கட்டணத்தை 10ரூபாவால் அதிகரிக்கவேண்டும் என தீர்மானிக்கப்பட்டதாவும், இந்த தீர்மானமானது சில்லறை காசுகளுக்கு பற்றாக்குறையினால், மீதி காசு கொடுப்பதற்கு இலகுவானதாகவே இத்தீர்மானம் முன்னெடுக்கப்பட்டதாக ராஜா குணதிலக்க தெரிவித்தார்.

இதேவேளை, பஸ் கட்டணம் 8 ரூபாவாக இருந்த போதிலும் நேற்று முதல் இலங்கை முழுவதும் பஸ் கட்டணம் திருத்த அடிப்படையில் 9 ரூபாவாக அறவிடப்படுகின்றது.

இவ்வாறு பஸ் கட்டணம் சில்லறை விலையாக இருப்பதனால் காசு அறவிடுவோருக்கும் பயணிகளுக்கும் அதிகமாக இடையூறுகள் ஏற்படுவதை காணக்கூடியதாக உள்ளது.

எவ்வாறாயினும், அனைத்து தனியார் பஸ்களுக்கும் மிக விரைவில் கொடுப்பனவு அட்டைகளை பெற்றுகொடுக்கும் வேலைத்திட்டத்தை செயற்படுத்தவுள்ளதாகவும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்னவும் தெரிவித்தார்.

ஈரானுக்கு செலுத்த வேண்டிய

3700 கோடி கடனை வழங்க இலங்கை இணக்கம்

ஈரான் இஸ்லாமிய குடியரசிலிருந்து இலங்கை கொள்வனவு செய்த மசகு எண்ணெய்க்காக செலுத்த வேண்டிய 3700 கோடி ரூபாவை வழங்குவதற்கு இலங்கை இணக்கம் தெரிவித்துள்ளது.

ஈரானிலிருந்து மீண்டும் எரிபொருளை கொள்வனவு செய்வதற்காகப் பேச்சுவார்த்தை நடாத்தச் சென்றிருந்த பெற்றோலிய வள அமைச்சர் சந்திம வீரக்கொடி ஈரான் அரசாங்க உயரதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையிலே இதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஈரானிற்கு அமெரிக்கா தடைவிதிக்க முன் இலங்கை ஈரானிடமிருந்து கொள்வனவு செய்த எரிபொருளுக்கு 3700 கோடியை இலங்கை செலுத்த வேண்டியிருந்தது.

இலங்கையிலிருந்து ஈரான் கொள்வனவு செய்யும் தேயிலைக்கு கிடைக்கும் வருமானம் மூலம் இக்கடனைச் செலுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

சபுகஸ்கந்தையிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ஈரானிலிருந்து இறக்குமதி செய்யும் மசகு எண்ணெயினை சுத்திகரிப்பு செய்ய வசதியுள்ளதால் இலங்கை ஈரானிலிருந்து மசகு எண்ணெயினைக் கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்துள்ளது.

பத்திரிகை நிறுவனத்தில் வேலைவாய்ப்பு

கொழும்பிலுள்ள முன்னணி தமிழ் பத்திரிகை நிறுவனமொன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியுள்ளவர்கள் ஒரு வாரத்துக்குள் உங்களுடைய விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

01. PROOF READER / ஒப்புநோக்குநர்

- உயர் தரத்தில் சித்தி பெற்றிருத்தல்
- ஒப்புநோக்குதலில் அனுபமுள்ளவர்களுக்கு முன்னுரிமை
- ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், 60 வயதுக்கு கீழ்ப்பட்டோர் வரவேற்கப்படுகின்றனர்

02. TYPE SETTER / கணனி தட்டச்சாளர்கள்

- கணனியில் தமிழில் வேகமாக தட்டச்சு செய்யக்கூடியவர்கள்
- குறைந்தது 1 வருட அனுபவம் இருத்தல்
- 35 வயதுக்கு கீழ்ப்பட்டவராக இருத்தல்

03. CIRCULATION EXECUTIVE / விநியோக நிர்வாகி

- விநியோக வலையமைப்பை விஸ்தரிக்கும் இயலுமை கொண்டிருத்தல்
- மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல்

04. TRAINEE JOURNALIST / பயிற்சி ஊடகவியலாளர்

- உயர்தரத்தில் சித்தி பெற்றிருத்தல்
- சிங்கள, ஆங்கில மொழி அறிவு கட்டாயம்

05. ADVERTISING EXECUTIVE / விளம்பர நிர்வாகி

- உயர்தரத்தில் சித்தி பெற்றிருத்தல்
- 35 வயதுக்கு கீழ்ப்பட்டவராக இருத்தல்
- மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல்

APPLY IMMEDIATELY:
FREELANKA MEDIA LTD.
156, HOSPITAL ROAD
KALUBOWILA, DEHIWALA.

NAVAMANI DAILY நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
02ND AUGUST 2016 - TUESDAY

எதிரணியின் பாத யாத்திரை கற்றுத் தரும் பாடங்கள்

பொது எதிரணியின் பாத யாத்திரை நேற்று கொழும்பை வந்தடைந்தது. கண்டியிலிருந்து கடந்த வியாழனன்று ஆரம்பிக்கப்பட்ட பாத யாத்திரை, கண்டி–கொழும்பு வீதி வழியே கொழும்பை வந்தடைந்தது. மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொது எதிரணியைச் சேர்ந்த எம்.பிக்களும் ஆதரவாளர்களும் இந்த பாத யாத்திரையில் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்தஜனாதிபதித்தேர்தலில்தோல்வியடைந்து,பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் தமது அணியின ரின்வெற்றியைஉறுதிப்படுத்தமுடியாதுபோனமஹிந்த ராஜபக்ஷவும்,அவரதுகூட்டாளிகளுமே,நல்லாட்சிஅரசுக்கெதிராக மக்களை அணிதிரட்டுவதற்கு இந்த பாத யாத்திரையை ஒழுங்கு செய்தனர்.

பொது எதிரணியினர் குறித்து நாட்டு மக்களிடம் அவ்வளவு நல்லெண்ணம் இல்லாதபோதும், இழந்து போன ஆட்சியை கைப்பற்றும் நோக்கில் தொடர்ந்தும் அவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

பொது எதிரணியினர் ஆட்சியலிருக்கும்போது, ஊழல்களிலும், சட்டத்துக்கு புறம்பான பல்வேறு வேலைகளிலும் ஈடுபட்டு வந்தனர். பொது எதிரணியிலுள்ள பெரும்பாலானோருக்கு எதிராக ஊழல், கொலை குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அது குறித்த விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொது எதிரணியினரின் நிலை இவ்வாறிருந்த போதும், பாத யாத்திரைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சில முட்டுக்கட்டை நடவடிக்கைகளும் கண்டிக்கப்பட வேண்டியதாகும். கண்டியில் ஆரம்பிக்கப்படவிருந்த பாத யாத்திரை, பேராதனையிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டது. காரணம், கண்டியிலிருந்து ஆரம்பிப்பதற்கு நீதி மன்றத்திலிருந்து பெறப்பட்ட தடையுத்தரவாகும்.

இவ்வாறே, கொழும்பை வந்தடையும்வரையிலும், மாவனல்லை, வரகாபொலை என்று பல்வேறு இடங்களிலும் நீதிமன்ற தடையுத்தரவுகளைப் பெற்று, பொது எதிரணியின் பாத யாத்திரைக்கு இடையூறு ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த இடையூறு முயற்சிகள் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

பொது எதிரணி குறித்து மக்கள் மத்தியில் எவ்வளவு தான் நல்லபிப்பிராயம் இல்லாதபோதும், பாத யாத்திரை யொன்றை மேற்கொள்வதற்கான உரிமை அவர்களுக்கு உள்ளது என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

பொது எதிரணியைச் சேர்ந்தோர் கடந்த 10 வருடங்களாக ஆட்சி செய்கையில், நாட்டில் அரசுக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது துப்பாக்கிச் சூடு நிகழ்த்தி பொது மக்களை கொன்றொழித்தது. ரதுபஸ்வல மக்களின் நீருக்கான போராட்டத்தின்போது கொல்லப்பட்டவர்கள், நீர்கொழும்பில் கொல்லப்பட்டோர் என்று இந்தப் பட்டியல் நீள்கின்றது.

பொது எதிரணியினர் ஆட்சியிலிருக்கும்போது அவ்வாறு செய்தனர் என்பதற்காக, அவர்களது ஆர்ப்பாட்டங்களுக்கும், பாத யாத்திரைகளுக்கும் இடையூறு விளைவிப்பது நல்லாட்சிக் கருத்தியலுக்கு எதிரானதாகும். எனவே, நல்லாட்சி அரசு இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

பாத யாத்திரை குறித்து இன்னுமொரு முக்கிய விடயத்தையும் குறிப்பிட்டாக வேண்டும். அதாவது, பாத யாத்திரையின்போது கருத்துத் தெரிவித்துள்ள மஹிந்தானந்த அலுத்கமகே, முஸ்லிம்களும் அவர்களுடன் உள்ளதாகத் தெரிவித்துள்ளார். அவரின் இந்தக் கூற்று நகைப்புக்கிடமானது. ஏனெனில், அவர்களின் ஆட்சியின்போது முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட்ட தீவிர கடும்போக்கு பௌத்த தேரர்களும் இந்த பாத யாத்திரையில் கலந்து கொண்டிருந்தனர்.

மொத்தத்தில் இந்த பாத யாத்திரை குறித்து இரு முக்கியமான விடயங்களை வலியுறுத்திக்கூற விரும்புகிறோம். முதலாவது, பொது எதிரணியினர் எவ்வளவுதான் ஊழல் பெருச்சாளிகளாகவும், இனவாதத்தின் ஊற்றுக் கண்களாகவும் இருந்தாலும், ஆர்ப்பாட்டம், பாத யாத்திரை மேற்கொள்வதற்கான உரிமை அவர்களுக்கும் உள்ளதை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

மற்றையது, பொது எதிரணியினர் இனஐக்கியம் குறித்துப்பேசி, தம்மை நல்லவர்களாகக்காட்டிக்கொள்வதை, மக்கள் நகைப்புடனேயே பார்க்கின்றனர் என்பதை பொது எதிரணி புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், பொது எதிரணியின் கடந்த காலம் இனவாதத்தின் தொட்டிலாக இருந்து வந்தது.



தலைமைக்கோஷம் சமூகத்தை பிளவுபடுத்துமா?

அமீர் ஹம்ஸா

கடந்த சில தினங்களாக ஒரு சில முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை தொடர்பில் வெளியிட்டுவரும் கருத்துக்களால் முஸ்லிம் சமூகம் மேலும் பிளவுக்கு உள்ளாகி பலவீனமடைந்து விடுமோ என இந்த நாட்டு முஸ்லிம் புத்திஜீவிகளும் சமூக ஆர்வலர்களும் குழம்பிப் போயிருக்கிறார்கள். முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைமை தொடர்பில் தலைவர் ரவூப் ஹக்கீம் மீது வெறுப்புக் கொண்ட ஒரு சிலர் கிழக்குத் தலைமை தொடர்பாக முன்வைத்திருக்கும் கருத்தால் பிரதேச வாதம் தலைக்கேறி ஐக்கியப்பட்டு ஒன்றுபட ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் முஸ்லிம் சமூகம் மேலும் பிரிந்து சின்னாபின்னமாகிவிடுமோ என்ற அச்சத்தினாலேயே முஸ்லிம் புத்திஜீவிகளும், சமூக ஆர்வலர்களும் இவ்வாறு குழம்பிப் போயிருக்கிறார்கள்.

உள்நாட்டில் மட்டுமல்லாமல் சர்வதேச நாடுகளிலும் முஸ்லிம்கள் பயங்கரவாதிகளெனவும், கொலைஞர்களெனவும் சித்தரிக்கப்பட்டு, அவர்கள் அடக்கியொடுக்கப்பட்டு கபளீகரம் செய்யப்பட்டு வருகின்ற ஒரு காலகட்டத்தில் அதனை எதிர்கொள்ள முஸ்லிம் தலைமைகள் ஒற்றுமைப்பட வேண்டுமென பல்வேறு தரப்புக்கள் வலியுறுத்தி வருகின்ற ஒரு நிலையில் இந்தப் பிரதேசவாத கோஷத்தை முன்வைத்து இந்த அரசியல் தலைவர்கள் எதனைத்தான் சாதிக்கப் போகிறார்களோ தெரியவில்லையென புத்திஜீவி ஒருவர் தனது ஆதங்கத்தை வெளியிட்டார்.

தமது இழந்த அரசியல் முகவரியை சரிசெய்து கொள்வதற்காகவே இந்த அரசியல்வாதிகள் முற்படுகிறார்கள் என பல்வேறு பிரதேச சமூக ஆர்வலர்கள் தமது விசனத்தை வெளியிடத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த நாட்டு முஸ்லிம் சமூகத்தினரிடையே பிரதேசவாதமோ?, பிரதேச வெறியோ என்றுமே இருந்ததில்லை. அவ்வாறிருந்திருந்தால் கிழக்கைத் தாண்டி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வளர்ந்து ஆளாகி பலமடைந்திருக்காது. இந்த அடிப்படை உண்மையை மர்ஹூம் அஷ்ரப் நன்கு புரிந்து வைத்திருந்தார். ஆனால் ஒரு சில அரசியல்வாதிகள் தமது சில்லறை நலன்களுக்காகவும், பழிவாங்கும் நோக்கிலும் இந்த நஞ்சு வித்தை முஸ்லிம் சமூகத்தினரிடையே தூவ முற்பட்டிருக்கிறார்கள் என பல்வேறு பிரதேசங்களிலுள்ள கட்சித் தொண்டர்களும் தமது விசனத்தை வெளியிடத் தொடங்கியிருக்கிறார்கள். தவறியேனும் இந்த கிழக்குத் தலைமை கோஷம் முஸ்லிம் சமூகத்தினரிடையே மற்றுமொரு பிரிவினையை ஏற்படுத்துமாக இருந்தால் இதனால் இந்த அரசியல் வாதிகள் எதிர்பார்க்கும் ஆதாயத்தின் அளவை விட இதனால் முஸ்லிம் சமூகம் எதிர்காலத்தில் எதிர்கொள்ளப் போகும் ஆபத்தின் அளவு அதிகமாக இருக்குமென்பதை சம்பந்தப்பட்ட தரப்பினர் புரிந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம் சமூகம் பல்வேறு சவால்களை கடந்த காலங்களில் எதிர்கொண்டது, தற்போதும் எதிர்கொண்டு வருகிறது. இதனால் எமது சமூகம் இழந்த சொத்துடைமைகளின் அளவை விடவும் நாம் அளுத்கமையில் இழந்த இரு இளைஞர்களின் உயிர் பெறுமதி கணிப்பிட முடியாதவை.

இதனை இந்த நாட்டு முஸ்லிம் சமூகம் இன்னும் மறந்து விடவில்லை. இவற்றுக்கான காரணிகளில் ஒன்று எம்மிடையே காணப்படும் பலவீனமாகும். எனவே ஒற்றுமைப்பட்டு ஒன்று திரண்டு இவ்வாறான சாவல்களை எதிர்கொள்ள தயாராக வேண்டுமே அல்லாமல் கிழக்கு தலைமை, தெற்குத் தலைமையென பேதம் பேசி சர்வதேச அங்கிகாரம் பெற்ற அரசியல் கட்டமைப்பொன்றை சிதறடித்து சின்னாபின்னமாக்க முற்படுவது இவர்களது அறிவின் அற்பத்தனமோ என்று கூட எண்ணத் தோன்றுகின்றது.

பேரினவாத அரசியல்வாதிகள் நீண்ட காலமாக திட்டமிட்டு வந்த சதி முயற்சி வெற்றி பெற்று பலமாக இருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் துண்டுகளாக உடைக்கப்பட்டுவிட்டதென்ற ஆதங்கமும் ஆத்திரமும் முஸ்லிம் சமூகத்தின் இதயத்தினுள் அடைப்பட்டுக் கிடக்கும் ஒரு நிலையில், மற்றொரு சதித் திட்டத்தை அரங்கேற்றி முஸ்லிம் சமூகத்தை அரசியல் ரீதியாக மேலும் பலமிழக்கச் செய்ய முற்படுகிறார்களோ தெரியவில்லை.

விரும்பியோ விரும்பாமலோ பேரினவாத சக்திகளின் சதி வலையில் சிக்குண்டு இருவேறு சக்திகளாக திகழும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும், அகில இலங்கை மக்கள் காங்கிரசையும் ஒன்றிணைத்து பலமான ஒரு அரசியல் கட்டமைப்பாக ஆக்குவதில் முஸ்லிம் சமூக இயக்கங்களும் புத்திஜீவிகளும் ஆர்வம் காட்டி வருகின்ற ஒரு சூழ்நிலையில், இவற்றுக்கு இந்த பிரதேசவாத கோசம் தடையாகி விடுமோ என இதனோடு தொடர்புட்டவர்கள் பேசிக் கொள்கிறார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பரந்து விரிந்த ஒரு அரசியல் கட்டமைப்பாகும். இதன் தலைவர் ரவூப் ஹக்கீம் தந்திரமாகவும், நிதானமாகவும் செயற்பட்டு முஸ்லிம் சமூகத்தின் பங்குகளை பெற்றுக் கொடுப்பதில் முனைப்போடு செயற்படும் ஒரு ராஜதந்திரி. அதேபோன்றுதான் அகில இலங்கை மக்கள் காங்கிரசை இந்த நாட்டு முஸ்லிம் சமூகம் பலமான சக்தியொன்று தேவைப்படுகின்றது. அதற்கான பின்புலமொன்றை ஏற்படுத்துவதற்கு சமூக இயக்கங்கள், புத்திஜீவிகள் ஒன்றிணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் இந்த துர்ப்பாக்கியம் நேர்ந்திருக்கிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பரந்து, விரிந்த அரசியல் குடும்பமொன்றாகும். இதில் முரண்பாடுகள் தோன்றுவது இயல்பானதே. இவை அனைத்தும் பேசித் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டியவை. மசூரா அடிப்படையில் பேசித் தீர்த்துக் கொள்ள முடியாத எந்தப் பிரச்சினையும் இருக்க முடியாது. அதுவே இஸ்லாமிய பாதை. எனவே விட்டுக் கொடுப்புக்கள் இதன்போது முக்கியமானது. அப்போதுதான் நாம் எதிர்பார்த்த இலக்கை அடையமுடியும். இவ்வாறான விட்டுக் கொடுப்புக்களின் போது முஸ்லிம்கள் வெற்றி பெற்றிருப்பதை இஸ்லாமிய வரலாறும் எமக்கு போதித்து கொண்டிருக்கிறது.

முஸ்லிம்களை பலவீனப்படுத்தி ஒடுக்குவதற்கான சதி முயற்சிகள் சர்வதேச மட்டத்தில் தந்திரமான முறையில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதற்காக சியோனியவாதிகள், யூதர்கள் பாரிய அர்ப்பணிப்புக்களை முற்கொள்கிறார்கள். அவர்கள் எமது காலடிக்கு வந்துள்ளார்கள். யூதர்களிடையே காணப்படும் பலமான ஒற்றுமையே அவர்களை பலமான ஒரு சமூகமாக ஆக்கியிருப்பதென்ற அறிவுரையை ஜாமியா நழீமியா கலாபீடத்தின் பணிப்பாளர் நாயகம் அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம்.பழீல் அடிக்கடி ஞாகப்படுத்தி வருகிறார். இந்த அறிவுரை மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

இந்த நாட்டு முஸ்லிம் சமூகம் அன்றிலிருந்து இன்று வரை ஐக்கியத்தோடும் சகோதர வாஞ்சனையுடனுமே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இவர்கள் வடக்கு, தெற்கு என பேதம் பார்க்கவில்லை. அவர்களிடையே பிரிவினைவாதம் காணப்படவில்லை. அதனால் தான் சுனாமியின் போது இந்த நாட்டு தெற்கு முஸ்லிம்கள் கிழர்ந்தெழுந்து சென்று அவர்களுக்கு உதவினார்கள். பல நாட்களாக அங்கு தங்கிருந்து முஸ்லிம் ஜனாசாக்களை அடக்குவதிலும், அடிப்படை கட்டமைப்புக்களை சரி செய்வதிலும் ஈடுபட்டார்கள். அதேபோன்று தான் அண்மையில் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் இடம்பெற்ற பாரிய வெள்ள அனர்த்தத்தின்போது கிழக்கு முஸ்லிம்கள் நிவாரணங்களோடு இங்கு படையெடுத்ததையும் இந்த நாட்டு முஸ்லிம்கள் கண்டார்கள். எனவே இவர்களிடையே பிரிவினைவாதம் கிடையாது.

எனவே தற்போது முஸ்லிம் காங்கிரஸ் எதிர் நோக்கியிருக்கும் தலைமைத்துவ நெருக்கடி பேச்சுவார்த்தை மூலமாக தீர்க்கப்படவேண்டும். அதற்கான சிறந்த பின்புலமொன்றை உருவாக்குவதற்கு முஸ்லிம் சமூக அமைப்புக்கள் முன்வரவேண்டும்.

கிழக்கு தலைமை தெற்குத் தலைமையென பேதம் பேசி பலமான அரசியல் கட்டமைப்பொன்றை சிதைத்து சின்னாபின்னப்படுத்துவதை கைவிட்டு ஒற்றுமைப்பட முயற்சிப்போம். ஏற்கனவே நாம் மத ரீதியிலும், இயக்க ரீதியிலும் பிளவு பட்டிருக்கின்றோம். எனவே எம்மிடையே காணப்படும் பிரிவினையை மூட்டை கட்டிவிட்டு சவால்களை எதிர்கொள்வதற்கு பலமான கட்டமைப்பாக ஒன்றிணைவோம்.



“உள்நாட்டில் மட்டுமல்லாமல் சர்வதேச நாடுகளிலும் முஸ்லிம்கள் பயங்கரவாதிகளெனவும், கொலைஞர்களெனவும் சித்தரிக்கப்பட்டு, அவர்கள் அடக்கியொடுக்கப்பட்டு கபளீகரம் செய்யப்பட்டு வருகின்ற ஒரு காலகட்டத்தில் அதனை எதிர்கொள்ள ஒற்றுமைப்பட வேண்டுமென பல்வேறு தரப்புக்கள் வலியுறுத்தி வருகின்ற ஒரு நிலையில் இந்தப் பிரதேசவாத கோஷத்தை முன்வைத்து இந்த அரசியல் தலைவர்கள் எதனைத்தான் சாதிக்கப் போகிறார்களோ தெரியவில்லையென புத்திஜீவி ஒருவர் தனது ஆதங்கத்தை வெளியிட்டார்.
தமது இழந்த அரசியல் முகவரியை சரிசெய்து கொள்வதற்காகவே இந்த அரசியல்வாதிகள் முற்படுகிறார்கள் என பல்வேறு பிரதேச சமூக ஆர்வலர்கள் தமது விசனத்தை வெளியிடத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த நாட்டு முஸ்லிம் சமூகத்தினரிடையே பிரதேசவாதமோ?, பிரதேச வெறியோ என்றுமே இருந்ததில்லை. அவ்வாறிருந்திருந்தால் கிழக்கைத் தாண்டி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வளர்ந்து ஆளாகி பலமடைந்திருக்காது. இந்த அடிப்படை உண்மையை மர்ஹூம் அஷ்ரப் நன்கு புரிந்து வைத்திருந்தார். ஆனால் ஒரு சில அரசியல்வாதிகள் தமது சில்லறை நலன்களுக்காகவும், பழிவாங்கும் நோக்கிலும் இந்த நஞ்சு வித்தை முஸ்லிம் சமூகத்தினரிடையே தூவ முற்பட்டிருக்கிறார்கள் என பல்வேறு பிரதேசங்களிலுள்ள கட்சித் தொண்டர்களும் தமது விசனத்தை வெளியிடத் தொடங்கியிருக்கிறார்கள். தவறியேனும் இந்த கிழக்குத் தலைமை கோஷம் முஸ்லிம் சமூகத்தினரிடையே மற்றுமொரு பாகப் பிரிவினையை ஏற்படுத்துமாக இருந்தால் இதனால் இந்த அரசியல் வாதிகள் எதிர்பார்க்கும் ஆபத்தின் அளவை விட இதனால் முஸ்லிம் சமூகம் எதிர்காலத்தில் எதிர் கொள்ளப் போகும் ஆபத்தின் அளவு அதிகமாக இருக்குமென்பதை சம்பந்தப்பட்ட தரப்பினர் புரிந்து கொள்ள வேண்டும்.”

தேசிய ஷூரா சபையின்

சகவாழ்வை இலக்காகக் கொண்ட

பள்ளிவாயில்கள் ஊடான செயற்றிட்டம்

அண்மைக் காலமாக இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான விஷமப் பிரசாரங்களும் வம்புக்கு இழுக்கும் செயல்பாடுகளும் தீவிரமடைந்து வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்தாது விட்டால் நாட்டு மக்கள் அனைவரும் பயங்கரமான விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும்.

எனவே, சகவாழ்வை இலக்காகக் கொண்ட சில செயற்றிட்டங்கள் பள்ளிவாயில்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என தேசிய ஷூரா சபை எதிர்பார்க்கிறது. அதற்காக பள்ளிவாயில் நிர்வாகிகளதும் அங்கு கடமை புரியும் உலமாக்களதும் ஒத்தாசைகளை பின்வரும் வகைகளில் அது வேண்டி நிற்கிறது.

1.உலமாக்கள் தமது குத்பாக்களையும் மற்றும் நிகழ்ச்சிகளையும் சகவாழ்வை ஏற்படுத்தும் வகையில் அமைத்துக் கொள்வது.

2.ஷூரா சபையால் சகல பள்ளிவாயில்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள அறிவித்தலை பள்ளிவாயில் நிர்வாகிகள் ஜும்ஆவுக்குப் பின்னர் பொதுமக்களுக்கு வாசித்துக் காட்டுவதுடன் பின்னர் அதனை பள்ளிவாயில் அறிவித்தல் பலகையில் தொங்கவிடுவது.

குத்பாவுக்கான சில குறிப்புக்கள் (கதீப்மார்களுக்கானவை)

பின்வரும் விடயங்கள் குத்பாக்களில் உள்ளடக்கப்படுவது பொருத்தமாக அமையும்:-

1.பன்மைத்துவத்தை ஏற்றல்:

பல இனங்கள் வாழுகின்ற சூழலில் முரண்பாடுகள் ஏற்படுவது சகஜம். எனினும் பொறுமை, விட்டுக் கொடுத்தல், சமாதான சகவாழ்வு என்பவற்றை இஸ்லாம் தனது அடிப்படை கோட்பாடுகளாகக் கொண்டிருக்கின்றது.மேலும், பலாத்காரம், கொள்கைத் திணிப்பு, மனது புண்படும் படியாக நடத்தல், பிற சமயத்தவர்களது நம்பிக்கை கோட்பாடுகளை பகிரங்கமாக விமர்சித்தல், கொச்சைபடுத்தல் போன்றவற்றை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இதற்கு பின்வரும் குர்ஆன் வசனங்களை ஆதாரங்களாகக் காட்டமுடியும்:

அ.அல்லாஹ் அல்லாத தெய்வங்களை அழைப்பவர்களை நீங்கள் ஏசாதீர்கள்.அதன் விளைவாக அவர்கள் அல்லாஹ்வை ஏசுவார்கள் (அல்குர்ஆன்)

ஆ.(இஸ்லாமிய) மார்க்கத்தில் எவ்வகையான நிர்ப்பந்தமுமில்லை (2.256)

இ. மேலும் உம் இறைவன் நாடியிருந்தால் பூமியிலுள்ள யாவருமே ஈமான் கொண்டிருப்பார்கள் எனவே மனிதர்கள் யாவரும் முஃமின்களாக (நம்பிக்கை கொண்டோராக) ஆகிவிட வேண்டுமென்று அவர்களை நீர் கட்டாயப்படுத்த முடியுமா? (10:99).

2 அனைவருக்கும் உதவிசெய்வதல் :

உலகிலுள்ள சகலரையும் மனிதாபிமான கண்ணோட்டத்தில் பார்க்குமாறு இஸ்லாம் வேண்டுகின்றது. அல்லாதோர் உறவின் அடித்தளமாக பின்வரும் வசனம் அமைந்துள்ளது.

அ.மார்க்கவிடயத்தில் உங்களுக்கெதிராக (ஆயுதம் தூக்கி)ப் போராடாத, உங்களை உங்களது வீடுகளிலிருந்து வெளியேற்றாதவர்களுக்கு நீங்கள் உபகாரம் செய்வதனை விட்டும் நீங்கள் அவர்களுடன் நீதியாக நடப்பதை விட்டும் அல்லாஹ் உங்களைத் தடுக்கமாட்டான். (60:08)

உபகாரம் செய்தல் என்பதற்கான இமாம் கராபியின் விளக்கம்: பின்வருமாறு:

இரக்கம், தேவையை பூர்த்தி செய்தல், உணவளிப்பது, ஆடைகொடுப்பது, இங்கிதமான பேச்சு, ரகசியம்இ மானம், மரியாதை, சொத்து, செல்வங்கள், உரிமைகள் போன்றவற்றைப் பாதுகாப்பது, அநீதியைத் தவிர்க்க உதவுது. (அல்புரூக்:3:15)

ஆ.பூமியிலுள்ளவர்களின் மீது இரக்கம் காட்டுங்கள். வானிலுள்ளவன் உங்களுக்கு இரக்கம் காட்டுவான்.என நபி (ஸல்) கூறினார்கள்.(திர்மிதி 1924)

எனவே பிறசமயத்தவர்களாக இருந்தாலும் மானசீக, பொருளாதார மற்றும் அறிவுரீதியான உதவிகளை அவர்களுக்கு நாம் செய்ய வேண்டும். நோய் விசாரிக்கச் செல்லல், இன்ப துன்பங்களில் பங்கேற்றல் போன்றன இனங்களுக்கிடையிலான உறவுப் பாலத்தினை மேலும் வலுப்பெறச் செய்யும்.நபி (ஸல்) அவர்களும் கூட யூத நோயாளியை சுகம் விசாரிக்கச் சென்றிருக்கின்றார்கள்.

3 தொந்தரவின்றி வாழ்வது:

பிறருக்கு தொந்தரவின்றி எமது அன்றாட கருமங்களையும் வணக்க வழிபாடுகளையும் அமைத்துக் கொள்ளல்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ''அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவன் இறைநம்பிக்கையாளன் அல்லன்'' என்று (மூன்று முறை) கூறினார்கள். ''அவன் யார்? இறைத்தூதர் அவர்களே!'' என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் ''எவனுடைய தொந்தரவுகளில் இருந்து அவனுடைய அண்டை வீட்டார் பாதுகாப்புப் பெறவில்லையோ அவன் தான்'' என்று பதிலளித்தார்கள். (புகாரி-6016)

எனவே பிறருக்கு எரிச்சலைத் தரும் வகையிலான ஒலிபெருக்கி பாவனை, பொருத்தமற்ற இடங்களில் வாகனங்களை நிறுத்துதல், பொதுப் போக்குவரத்து சாதனங்களில் தொலை பேசியில் உச்ச தொனியில் உரையாடல் போன்றனவற்றை நாம் தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

4. பிற சமயத்தவர்களது மனது புண்படும் வகையிலான செயற்பாடுகள் மற்றும் நடத்தைகளிலிருந்து தவிர்ந்து கொள்ளல்:

இறைச்சி கடைகளில் இறைச்சியை பிறருக்கு ஆத்திரமூட்டும் வகையில் காட்சிப்படுத்தல் மிருகங்களை பகிரங்கமான இடங்களில் அறுப்பது போன்ற வற்றை தவிர்ந்து கொள்ளல்.

5. பிறர் மேற்கொள்ளும் பொதுப் பணிகளில் பங்கெடுத்தல்:

இன்னும் நன்மையிலும் பயபக்தியிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள்.பாவத்திலும் அத்துமீறலிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டாம். அல்லாஹ்வுக்கே பயப்படுங்கள். நிச்சயமாக அல்லாஹ் கடுமையாக தண்டிப்பவன்.(05:02)

சிரமதானம், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளை அமைத்தல், இரத்ததான முகாம், போதைவஸ்து ஒழிப்பு, சூழல் பாதுகாப்பு போன்றவற்றில் பங்கெடுத்தல்.

6 இஸ்லாம் பற்றிய தெளிவை வழங்குவது:

முஸ்லிம் அல்லாதவர்கள் இஸ்லாத்தை பற்றி அதிகமான தப்பபிப்பிராயங்களைக் கொண்டிருப்பதால் அவற்றை இல்லாமற் செய்வதற்கான சில ஏற்பாடுகளை முன்னெடுத்தல்.

இஸ்லாத்தைப் பற்றிய தெளிவை நூல்கள், கலந்துரையாடல் மூலமாகவும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களினூடகவும் அவர்களுக்கு முன்வைத்தல். இதன் போது நிதானமாகவும் அறிவுபூர்வமாவும் நடந்துகொள்வதோடு, காலத்துக்கு உகந்த வழிமுறைகளையும் கைக்கொள்ளல் வேண்டும்.

குறிப்பாக குர்ஆன், ஹதீஸ் வசனங்களை முஸ்லிம் அல்லாதவர்கள் தவறாக விளங்கியிருப்பதனால் அவை பற்றி அவர்களுக்கு போதிய தெளிவினை வழங்குதல்.

7. நீதியும் நியாயமும் :

பிறசமயத்தவர்களுடனான எமது சமூக உறவுகளின் போது நீதியாகவும் கண்ணியமாவும் இஸ்லாமிய வரையறைகளுக்கு உட்பட்டும் நடந்து கொள்ளல்.வியாபார கொடுக்கல் வாங்கல்களில் மோசடி செய்தல், பொய் சொல்லல், வாக்குறுதி மீறல், ஏமாற்றல், இலஞ்சம் கொடுத்தல் போன்றன முஸ்லிம் சமூகத்தில் இருக்கும் வரை பிற சமூகங்களின் அபிமானத்தைப் பெறுவது சாத்தியமானதன்று.

8. கல்வித் துறை முன்னேற்றம்:

முஸ்லிம்கள் கல்வித் துறையில் அதிகூடிய முக்கியத்துவத்தினை வழங்கி கல்விமான்கள் மற்றும் ஆய்வாளர்களை உருவாக்குதல் இன நல்லுறவினை வளர்க்கும்.

9. ஜக்கியம்:

முஸ்லிம்கள் தமக்கு மத்தியில் பரஸ்பர அன்புடனும் விசுவாசத்துடனும் ஜக்கியப்பட்ட சமூகமாகவும் வாழல் வேண்டும். மாற்றமாக காட்டிக் கொடுத்தல் மற்றும் அற்ப விடயங்களுக்காக பொலிஸ் மற்றும் நீதிமன்றங்களை நாடல் போன்றன எம்மை அதிகம் பலவீனப்படுத்தி எமக்கு எதிரானவர்களை அணிதிரளச் செய்யும்.

இன்னும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள் - நீங்கள் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள் (அவ்வாறு கொண்டால்) கோழைகளாகி விடுவீர்கள். உங்கள் பலம் குன்றிவிடும். (துன்பங்களைச் சகித்துக் கொண்டு) நீங்கள் பொறுமையாக இருங்கள் - நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கின்றான்.(08.46)

10. பலமான ஈமான் :

எல்லா சந்தர்ப்பங்களிலும் அல்லாஹ்வுடனான எமது உறவை பலப்படுத்திக் கொள்ள வேண்டும். திக்ர், இஸ்திஃபார், தவக்குல், ஸப்ர், துஆ போன்றன எமது ஆயுதங்களாக இருக்க வேண்டும்.

11.அல்லாஹ்வின் நியதி-ஏற்பாடு என நம்புவது

இஸ்லாத்தினை மிகச்சரியாக பின்பற்றுபவர்களுக்கு எதிர்ப்புகளும் விமர்சனங்களும் ஏற்படும் என்பதனை புரிந்து கொள்ளல்.இஸ்லாத்தை மிகச்சரியாக பின்பற்றுபவர்களுக்கு எதிர்ப்புக்களும் விமர்சனங்களும் சோதனையாகவே வரும். '' நீங்கள் உங்களது சொத்துக்கள், உயிர்கள் விடயத்தில் நிச்சயமாக சோதிக்கப்படுவீர்கள். உங்களுக்கு முன்னர் வேதம் கொடுக்கப்பட்டவர்களிடமிருந்தும் இணை வைத்தவர்களிடமிருந்தும் நிச்சயமாக மனதுக்கு அதிகம் கவலை தரும் தகவல்களை செவியேற்க நேரிடும்.'' (ஆல இம்ரான்:186)

மாற்றமாக இஸ்லாத்தை அரைகுறையாகப் பின்பற்றுவதாலோ அல்லது முழுமையாகப் பின்பற்றாமல் இருந்தாலோ எதிர்ப்புகளும் விமர்சனங்களும் தண்டனையாக அமையும்.மிகச் சரியாகப் பின்பற்றினால் வருவது சோதனைகளாகும்.

மேற்கூறப்பட்ட வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு உலமாக்கள் தமது ஜும்ஆ குத்பாக்களையோ வேறு உபன்னியாசங்களையோ அமைத்துக்கொள்ளும் படி தேசிய ஷூரா சபை பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறது.

வல்லஅல்லாஹ் இலங்கை நாட்டில் சமாதானம் மலர அருள் பாலிப்பானாக!ஆமீன்.

இலங்கை வாழ் அனைத்து முஸ்லிம்களுக்குமானது

(ஜும்ஆவுக்குப் பின்னர் வாசிப்பதற்கும் அறிவித்தல் பலகையில் தொங்கவிடப்படுவதற்குமான பகுதி)

அண்மைக்காலமாக இலங்கையில் பொதுவாக இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் வலுப்பெற்று வருகின்றன. முஸ்லிம்களும் நெருக்கடியான சூழ்நிலைகளை எதிர்நோக்கிக் கொண்டிறுக்கிறார்கள். இந்நிலை உருவாகுவதற்கு :

1. முஸ்லிம்களின் பிழையான செயற்பாடுகளும்
2. இஸ்லாத்தின் எதிரிகளது செயற்பாடுகளும்
3. இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பற்றிய அந்நிய சமூகங்களின் பிழையான புரிதல்களும் காரணங்களாக உள்ளன.

இந்நிலையைத் தொடரவிடுவது குறிப்பாக முஸ்லிம்களுக்கும் பொதுவாக ஏனைய இனத்தவர்களுக்கும் ஏன் முழு நாட்டுக்கும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும் .ஏற்கனவே ஏற்படுத்தியுமிருக்கிறது.

எனவே முஸ்லிம்கள் வெறுமனே பேச்சளவில் மட்டும் நின்று விடாமல் சிறந்த முன்மாதிரி மிக்க நடத்தைகளிலும் செயற்பாடுகளிலும் ஈடுபட வேண்டும். மேலும் முஸ்லிம்களுக்கு மத்தியில் முரண்பாடுகளும் விரசல்களும் ஏற்படும் என இனவாதிகள் தருணம் பார்த்துக் கொண்டிருப்பதால் அவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பத்தை நாம் ஏற்படுத்திக் கொடுக்கலாகாது. இந்த விடயங்களை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே இனவாதிகளது சூழ்ச்சிகளில் இருந்து எம்மை நாம் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் நாட்டில் சமாதான சகவாழ்வை மீள் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கும் முஸ்லிம்கள் பின்வரும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என தேசிய ஷூரா சபை பணிவாக வேண்டிக் கொள்கிறது:

1. உலமாக்கள், புத்திஜீவிகள், பள்ளிவாயல் நிர்வாகிகள், அரச, தனியார் துறை அதிகாரிகள், ஊழியர்கள், இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் சமூக சேவை அமைப்புக்களின் அங்கத்தவர்கள், ஊடக வியலாளர்கள் போன்ற சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் உள்ள பொறுப்புதாரிகளும் சமாதான சகவாழ்வை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இது சமூகத்தின் முதுகெலும்புகளான இவர்களது அமானிதமான பொறுப்பாகும்.
2. பிற சமயத்தவர்களது ஆத்திரத்தைத் தூண்டும் நடவடிக்கைகளை முஸ்லிம்கள் முற்றாகத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பாதைகளில் வாகனங்களை பொருத்தமற்ற விதத்தில் செலுத்துவது, நிறுத்துவது ஒலிபெருக்கிகளை பிறருக்கு எரிச்சலைத் தரும் வகையில் பயன்படுத்துவதுவது போன்றன தவிர்க்கப்பட வேண்டும்.
3. காரியாலயங்கள், வைத்தியசாலைகள் போன்ற பொது மக்கள் கூடும் இடங்களில் கண்ணியமாகவும் முறையாகவும் நடந்து கொள்ள வேண்டும். குறிப்பாக பொதுப் போக்குவரத்து சாதனங்களில் பிரயாணம் செய்யும் போது மிகவுமே பண்பாடக நடந்து கொள்வது அவசியமாகும்.
4. பொய் பேசுதல், வாக்குறுதி மீறுதல், களவு, வட்டி, இலஞ்சம் என்பன முஸ்லிம்கள் பற்றிய பிழையான மனப்பதிவை பிற சமயத்தவர்களிடம் ஏற்படுத்தியிருப்பதாலும் இஸ்லாத்தைப் பொறுத்தவரை அவை பெரும்பாவங்களாக இருப்பதாலும் அவை முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்.
5. நட்டின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவதன் மூலம் நாட்டுக்கு விசுவாசமாக நடப்பதோடு, நாட்டைக் கட்டியெழுப்பும் பணிகளில் (Nation Building) நாம் மும்முரமாக ஈடுபட வேண்டும்.
6. பிற சமயத்தவர்கள் எமது அயலவர்களாக இருந்தால் அவர்களுக்கு தொந்தரவு கொடுக்காமல் இயன்றவரை உதவிகளைச் செய்து அல்லாஹ்வின் கூலியைப் பெறமுயற்சிக்க வேண்டும்.
7. குறிப்பாக இளைஞர்கள் நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு மிகவுமே ஜாக்கிரதையாக நடப்பது அவசியமாகும்.
8. இனங்களுக்கிடையிலான கசப்புணர்வை வளர்க்கும், பொய்யான ஆத்திரமூட்டும் தகவல்களை ஸுழஉயைட ஆநனயைள எனப்படும் சமூக வலைத் தளங்களில் பகிர்வது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்.மேலும், பிற சமயத்தவர்களது கலாசார மத தனித்துவங்களை நாம் கொச்சைப்படுத்தலாகாது.
9. பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒரு சிலர் மாத்திரமே முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும் விமர்சித்துக்கொண்டு வம்புக்கிழுத்துக்கொண்டிருப்பதால் அவர்களை வைத்து அவர்களது மார்க்கத்தை நாம் எடை போடலாகாது.
10. அந்த பெரும்பான்மை இனத்தவர்களுக்கு மத்தியில் உள்ள முஸ்லிம்களுடன் இணக்கமாக வாழ விரும்பும் பெரும் எண்ணிக்கையாக உள்ளவர்களையும் நாம் எமது செயற்பாடுகளால் எமது எதிரிகளாக மாற்றிக் கொள்ளக் கூடாது.
11. எப்போதும் அல்லாஹ்வுடனான எமது உறவை பலமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஐவேளை தொழுகைஇ திக்ர், பாவமன்னிப்பு, பணிவு என்பன எமது பண்புகளாக இருக்க வேண்டும்.
12. உபத்திரவம் செய்தவர்களை பெருமனதோடு மன்னிப்பது, அவர்களுக்கு உதவி செய்வது போன்றன அவர்களது மனதை நெகிழச்செய்யும்.
13. எமக்கெதிரானவர்களும் நேர்வழி பெற வேண்டும் என நாம் துஆ செய்ய வேண்டும்.
14. எந்தவொரு இனவாத நடவடிக்கைகள் இடம்பெற்றாலும் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் சமூகத் தலைவர்களது ஆலோசனைகளைப் பெற்று அவற்றுக்கேற்பவே நடந்து கொள்வது அவசியமாகும்.

மேற்கூறப்பட்ட சில நடவடிக்கைகளை பின்பற்றி ஒழுகும்படி தேசிய ஷூரா சபை இலங்கை முஸ்லிம்களை பணிவாகக் கேட்டுக்கொள்கிறது. அல்லாஹ் இலங்கைத் திருநாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவ அருள்பாலிப்பானாக! ஆமீன்.

(மேற்படி அறிவித்தல் பெரும்பாலான பள்ளிவாயில்களுக்கு எற்கனவே அனுப்பப்பட்டுள்ளதுஇ கிடைக்கபெறாதவர்கள் தேசிய ஷூரா சபையின் உத்தியோகபூர்வ வெப் தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும் http://nationalshoora.com

மேலதிக விபரங்களுக்கு: 0766-270470, 0117 546 546)

கிராமத்து வயல் பாடல்கள் 02



புரையும் மான்மரையும்

அந்தக் காலங்களில் விவசாயிகளிடம் பாதுகாப்புக்கும், வேட்டைக்கும் கட்டுத் துவக்கு இருந்தது. இவர்கள் காடுகளில் மான், மரை, மாடு, பறவைகளை உணவுக்காக வேட்டையாடுவது வழக்கம். பகிர்ந்துண்ணும் ஏழை விவசாயிகளின் பண்பை இது பறைசாற்றுகிறது.

மான் மரையும் சுட்டு
மரைக்கார்ர பொரயடியில்
பங்கு போட்டு வெச்சிரிக்காம் - நமக்கு
பகுந்து தரப்போறதிக்கு

மானமுள்ள விவசாயப் பெண்

முன்னோர் காலத்தில் வயல்களில் அறுவடை காலங்களில் கிராமத்து ஏழைப் பெண்கள், நெற்கதிர்களை பொறுக்கி எடுப்பது வழக்கம். அப்படிப்பட்ட ஏழைப் பெண்ணொருத்தியின் மனவுறுதியை இந்த பாடல் எடுத்தோம்புகிறது.

கதிரு பொறுக்கி
காலமெல்லாம் வாழ்ந்தாலும்
மானமழிஞ்சிதெனா - நான்
மறுகணமே மாஞ்சிருவன்

கதிர் பொறுக்கும் பெண் ஏழையாக இருந்தாலும் தனது மானத்துக்கு ஒரு பங்கம் ஏற்பட்டால் மறுகணமே தனது உயிரை மாய்த்துக்கொள்வேன் என்று தனது கற்புத்தன்மை குறித்து உறுதியுடன் இருப்பதை இறுமாப்புடன் கூறுகிறாள்.

வாசகர்களே!

வான் பிறை பகுதி தினமும் வெளிவர உள்ளது. இந்தப் பகுதிக்கு ஏற்ற தரமான ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம்.

156, Hospital Road, Kalubowila,Dehiwala.
editornavamani@gmail.com,
freelankamedia@gmail.com

இஸ்லாமிய குடும்ப நிர்வாகம்

ஸக்கியா ஸித்தீக்

இஸ்லாமிய குடும்பத்தில் கணவனும், மனைவியும் தமது பலத்தையும் பலவீனத்தையும் இனம் கண்டு வாழ்வை நெறிப்படுத்துவது அவசியமாகும்.

கணவன் மனைவிக்கிடையிலான இடைத்தொடர்பு சீராக நடைபெற இருவரது உரிமைகளும், கடமைகளும் பேணப்பட வேண்டியது அவசியமாகும்.

குடும்ப உறவுகளைப் பேணுதல், ஸாலிஹான சந்ததிகளை உருவாக்குதல், குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல் போன்ற கடமைகளை அல்லாஹ் கணவன் மனைவியர் மீது விதியாக்கியுள்ளான். சூரதுன் நிஸாவின் முதல் வசனம் இதனை தெளிவுபடுத்துகிறது.

கணவன் மனைவியரின் கடமைகளும், உரிமைகளும் பரந்த இறைவனால் வரையறைப்படுத்தப்பட்டுள்ளமை இஸ்லாமிய குடும்ப அமைப்பின் சிறப்பம்சமாகும். குடும்ப நிர்வாகம், பொருளாதார மேம்பாடு, குடும்பத்தின் உணர்வுபூர்வமான ஆன்மீக வளர்ச்சியைப் பராமரித்துப் பேணுதல் ஆகியவற்றில் ஆணும், பெண்ணும் சமமாகப் பங்கேற்க வேண்டியது அவசியமாகும்.

இஸ்லாம் குடும்ப நிர்வாகத்தில் ஆணுக்குத் தலைமைத்துவத்தை வழங்கியுள்ளது. ஆண்கள் பெண்களை நிர்வாகிப்போர் ஆவர்(4,34) என அல் குர்ஆன் குறிப்பிடுகிறது. இதற்கு காரணம் அல்லாஹ் அவர்களில் சிலருக்குச் சிலரை விட உயர்வை அளித்திருக்கின்றான் என்பதும், ஆண்கள் தங்களுடைய செல்வத்தில் இருந்து செலவு செய்கிறார்கள் என்பதுமாகும்.

குடும்பத்தின் பொருளாதார மேம்பாட்டைப் பொறுத்தவரையில் கணவனும், மனைவியும் இஸ்லாம் விதித்துள்ள விதிமுறைகளைப் பேணி கலந்தாலோசித்து செயல்படவேண்டும். மேலும் வரவு செலவில் ஹலாலான வழிமுறைகள் பேணப்படுவது அவசியமாகும். குடும்பத்திற்குச் செலவழிப்பது ஆணின் கடமையாகவும், பிள்ளைகளை ஒழுங்காக வளர்த்து குடும்பத்தைப் பராமரிப்பது பெண்ணின் கடமையாகவும் கொள்ளப்படுகிறது. கணவனின் அனுமதியோடு மனைவிக்கு உழைக்க உரிமை உண்டு. ஆனால் பெண்ணின் உழைப்பு மார்க்க வரையறைகளை மீறிவிடக்கூடாது. கணவனின் பொருளாதார, சமூக அந்தஸ்தை உயர்த்துவதில் பெண் பங்காற்றுவதுடன், கணவனில்லாத நேரத்தில் அவனது பொருளையும், கண்ணியத்தையும், மானத்தையும் காப்பது பெண்ணின் கடமையாகும்.

விசுவாசம் கொண்ட ஆண்களும், விசுவாசம் கொண்ட பெண்களும் ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாக இருக்கின்றனர். அவர்கள் ஒருவர் மற்றவரை நன்மை செய்யும்படி தூண்டியும், பாவம் செய்யாது தடுத்தும், தொழுகையை கடைப்பிடித்தும், ஸகாத் கொடுத்தும் வருவார்கள். அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் வழிப்பட்டு நடப்பார்கள். இத்தகையோருக்கு அதி சீக்கிரத்தில் அல்லாஹ் அருள்புரிவான். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தோனும், ஞானமுடையோனுமாக இருக்கின்றான். (9,71) என்பது குர்ஆனின் போதனையாகும்.

பிரான்ஸ் முஸ்லிம்கள் கத்தோலிக்க வழிபாட்டுத் தளத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கு எதிராக நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உலக பயங்கர வாதத்துக்கு எதிராக ஒன்றுபட்டுள்ளனர்.

கடந்த வாரம் பிரான்ஸ் கத்தோலிக்க வழிபாட்டுத் தளத்தில் பயங்கரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 84 வயதுடைய முதிய மதகுருவுக்கும் இங்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

ஞாயிறன்று நடைபெற்ற இந்நிகழ்வில் முஸ்லிம்களை கத்தோலிக்க மதகுருவொருவர் வரவேற்பதை படத்தில் காணலாம்.

ஜிலேபி

தேவையான பொருட்கள்:

- கோதுமை மா - 1 கப்
- சோள மா - 2 மேசைக்கரண்டி
- தயிர் - 3/4 கப்
- பேக்கிங் சோடா - 1/2 தேக்கரண்டி
- நெய் - 2 மேசைக்கரண்டி
- மஞ்சள் தூள் - சிறிதளவு
- எண்ணெய் - பொரிப்பதற்கு தேவையான அளவு

சீனி பாகிற்கு...

- சீனி - 1 கப்
- தண்ணீர் - 1 கப்
- தயிர் - 3/4 கப்
- குங்குமப்பூ - சிறிதளவு
- எலுமிச்சைச் சாறு - 1 தேக்கரண்டி

செய்முறை

சீனி பாகு செய்ய...

ஒரு பாத்திரத்தில், ஒரு கப் தண்ணீரில், சீனியை இட்டு கரைந்த பின் குங்குமப்பூவை சேர்த்து, மிதமான தீயில் கம்பிப் பதம் வரும் வரை கூடாக்கி, எலுமிச்சைச் சாறை சேர்க்கவும். எலுமிச்சைச் சாறு சர்க்கரைப் பாகு உறையாமல் தடுக்கும். பாகு கூடாக இருக்க வேண்டும்.

கோதுமை மா, சோள மா, பேக்கிங்சோடா, மஞ்சள் தூள் அனைத்தையும் நன்கு கலந்த பின், நெய், தயிர் சேர்த்து கெட்டியான மாவாக கரைத்துக் கொள்ளவும். மாவின் பதம் ஜிலேபி பிழிவதற்கு ஏற்றாப் போல் இருக்க வேண்டியது அவசியம். 12 முதல் 24 மணி நேரம் வரை மாவை புளிக்க வைக்க வேண்டும். புளித்த மாவை, ஒரு கூம்பு வடிவ பிளாஸ்டிக் பையிலிட்டு கூடான எண்ணெயில் பொரித்து கம்பிப் பதம் உள்ள சர்க்கரைப் பாகில் இட்டு, அரை மணிநேரம் வரை வைத்திருந்து, பின்னர் சுவையான ஜிலேபியை பரிமாறலாம்.

கர்ப்பிணிகளின் நிம்மதியான தூக்கத்திற்கு...

கர்ப்பகாலத்தில் தூங்குவது மிகவும் கடினமான ஒன்று. சிறுநீர் வருவது, மனநிலை மாற்றம், பகல் நேரத் தூக்கம், தசைப்பிடிப்புகள் போன்றவை இதற்கு காரணங்களாகும்.

ஆனால் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நல்ல தூக்கம் இருந்தால் தான் குழந்தைக்கும், தாய்க்கும் ஆரோக்கியம்.

பொதுவாக முதல் மூன்று மாதத்தில் அதிகப்படியான சோர்வினால் பகல் நேரத்தில் தூங்க தோன்றும். அப்படி பகலில் தூங்கினால், இரவில் தூக்கத்தை தொலைக்க நேரிடும். ஆகவே பகல் நேரத்தில் தூங்குவதை தவிர்க்கலாம்.

தூங்குவதற்கு நல்ல மென்மையான மற்றும் முதுகிற்கு உறுதுணையாக இருக்குமாறு தலையணைகளை பயன்படுத்த வேண்டும். இதனால் நிம்மதியான தூக்கம் கிடைக்கும்.

மன அழுத்தம் அல்லது மன நிலை மாற்றத்தினால் தூக்கமின்மை ஏற்படும். அதனை குறைக்க யோகா, நடைப்பயிற்சி போன்றவற்றை மேற்கொண்டால், நிச்சயம் மன அழுத்தத்தில் இருந்து விடுபடலாம்.

தூங்கும் முன் வெதுவெதுப்பான பால் குடித்தாலும் நல்ல தூக்கம் கிடைக்கும்.

குழந்தையும், தாயும் நன்கு ஆரோக்கியமாக இருப்பதற்கு தண்ணீர் மற்றும் நீர்ம பானங்கள் அவசியம். ஆனால் அத்தகைய பானங்களை பகல் வேளையிலே அருந்தவேண்டும். மாலைவேளையில் அவற்றின் அளவைக் குறைப்பதால் இரவில் அடிக்கடி சிறுநீர் வருவதைத் தவிர்க்கலாம். இதனால் இரவில் தூக்கம் தடைபடாது.

இரவில் தூங்க முன், வெதுவெதுப்பான நீரில் குளித்தால், இரவில் நல்ல தூக்கம் வரும்.

அக்குள் துர்நாற்றம்

பா.மலரம்பிகை

சிலருக்கு தலையில் பேன் அதிகமாக இருக்கும். ஆரம்பத்திலேயே பேன் தொல்லைக்கு முற்றுப்புள்ளி வைக்காவிட்டால், பின் பேனைப் போக்குவது என்பது சிரமமாகிவிடும். இயற்கை முறையில் பேனை இப்படியும் போக்கலாம்.

விஸ்டரின் மௌத் வொஷ், வெள்ளை வினாகிரி, பேன் சீப்பு மற்றும் ஷவர் கேப் அல்லது பிளாஸ்டிக்பை டவல் ஆகியவற்றை முதலில் எடுத்துகொள்ளவும். முதலில் தலை முடியை நீரில் அலசிக் கொள்ள வேண்டும். பின் மௌத் வொஷ் கொண்டு அலசி, ஷவர் கெப் அல்லது பிளாஸ்டிக் பை கொண்டு தலையை சுற்றிக் கொள்ள வேண்டும்.

1 மணிநேரம் கழித்து, தலையில் சுற்றியுள்ளதை கழற்றி விட்டு, பின் வெள்ளை வினாகிரி கொண்டு தலைமுடியை அலசி, மீண்டும் ஷவர் கெப் அல்லது பிளாஸ்டிக் பை கொண்டு தலையை சுற்றிக் கொள்ள வேண்டும்.

மீண்டும் 1 மணிநேரம் ஆன பின், தலையில் உள்ளதைக் கழற்றி, ஷம்பு பயன்படுத்தி தலையை நன்கு அலச வேண்டும்.

இறுதியில் பேன் சீப்பு கொண்டு தலையை சீவினால், தலையில் இருந்த பேன் இறந்து உதிர்வதை நன்கு காணலாம்.

பேன் தொல்லையா?

மாமியாரிடம் மருமகள் எதிர்பார்ப்பவை

உலகில் எந்த பிரச்சினையை வேண்டுமானாலும் தீர்த்துவிடலாம், ஆனால் மாமியார்-மருமகள் பிரச்சினையை தீர்ப்பது என்பது ஒடும் நீரில் ஓவியம் வரைவது போன்றது.

இருவரும் ஒருவரையொருவர் நன்றாக புரிந்துகொண்டு, அன்போடு வாழ்ந்தாலே இல்லறம் நல்லறமாகும். எனவே மாமியார் மருமகளிடம் எவ்வாறு நடந்து கொள்ளலாம் என்பதை பார்ப்போம்.

புகுந்த வீட்டிற்கு வரும் மருமகளிடம் மறைத்து வைக்காமல் வெளிப்படையாக பேச வேண்டும், ஏனெனில் அப்போது தான் அவர்களால் புதிதாக எதையும் கற்றுக் கொள்ள முடியும்.

மருமகளுடன் பேசினாலும், உணர்வுபூர்வமான பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மருமகளாக அவர்களை நடத்துவதை விட சொந்த மகளாக நடத்துங்கள்.

கணவன்களிடம் எந்த விடயத்தை பகிர்ந்து கொண்டாலும், அதனை பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது, அதுபோன்று மருமகள், மாமியாருக்குள் யார் முக்கியம் என்ற சூழ்நிலையையும் ஒருபோதும் உருவாக்கக் கூடாது.

ஒரு பெண் எந்த அளவுக்கு தனது தாயாரை விரும்புகிறாளோ, அதே அளவுக்கு மரியாதை தனது மாமியாருக்கும் கொடுக்க வேண்டும்.

மாமியார்-மருமகளுக்குள் பிரச்சினை வந்தால், அருனுள் உறவினர்கள் தலையிட அனுமதிக்க கூடாது.

இருவரில் யார் பெரியவர்கள் என்ற அகங்காரம் மற்றும் வேற்றுமை எப்போதும் வந்து விடக் கூடாது.

தனது கணவர் தவறு செய்தால், அதனை தான் திருத்த முயற்சி செய்யும் பட்சத்தில், இடையில் மாமியார் குறுக்கிடுவதையும் விரும்ப மாட்டார்கள்.

நான் சொல்வதை கேட்டு தான் உங்கள் மகன் எல்லாவற்றையும் செய்கிறான் என நினைக்கக் கூடாது, உங்களுடைய மகன் தனது அறிவுக்குட்பட்டே நடக்கிறான் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

ஒலுவில் கடலரிப்பும் முஸ்லிம் அரசியலின் இயலாமையும்

துறையூர்
ஏ.கே மிஸ்பாஹுல் ஹக்

கிழக்கிலுள்ள ஊர்களில் ஒலுவில் இயற்கை வளங்கள் மிகைத்துக் காணப்படும் ஒரு ஊராகும்.விடுமுறை காலங்களில் ஒலுவிலில் ஒய்வெடுத்துச் செல்ல பல ஊர்களிலிருந்தும் மக்கள் வெள்ளம் பை பொடுக்கும். தற் போது அதன் இயற்கை வளங்கள் கடலால் சுரண்டப்பட்டு அந்த நிலைமை மாற்றம் பெற்றுள்ளது.

1998 ஒக்டோபர் 23ஆம் திகதி அப்போது துறைமுக அமைச்சராக யிருந்த அஷ்ரபினால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒலுவிலில் துறைமுகமொன்றை நிறுவவுள்ள தான செய்தி மக்களுக்கு வெளிப் படுத்தப்பட்டிருந்தது. இதனை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அஷ்ரபுக்கு அந்த அமைச்சை கொடுத்து நிர்மா ணிக்க கூறியதாக அஷ்ரப் தனது 48 பக்க கடிதத்தில் குறிப்பிட் டுள்ளார். இதிலிருந்து அஷ்ர பின் ஆளுமையை தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது.

பிற்பட்ட காலப்பகுதியில் சந்திரிகா அரசு ஒலுவில் துறை முகத்தை நிர்மாணிப்பதற்கு பின்வாங்கியது. இதனை அறிந்த மர்ஹூம் அஷ்ரப் தனது 48 பக் கக் கடிதத்தில் ஒலுவில் துறைமுக அபிவிருத்தியை கால தாமதப் படுத்தாமல் செய்ய வேண்டும் என்று பலர் காரசாரமாக சந்திரி காவிடம் வலியுறுத்தியிருந்தார். இது வெளியிடப்பட்டு சிறிது காலத்தினுள் அஷ்ரப் மரணித்தது டன் இந்த திட்டமும் அப்படியே மரணித்துவிட்டது.

இதன் பின்னர் சுமார் ஒரு தசாப்தம் கழிந்து 2008ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு நவோதயா திட்டத்தின் கீழ் ஒலு விலில் துறைமுகத்தின் நிர்மாணப் பணிகள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவினால் ஆரம் பித்து வைக்கப்பட்டது.இக்காலப் பகுதியில் முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாண சபைத் தேர் தலை மையப்படுத்தி மஹிந்த அர சிலிருந்து வெளியேறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சந்திரிகா செய்ய மறுத்த ஒன்றை மஹிந்த செய்தமையை வைத்து சிறுபான்மையினரின் விடயத்தில் சந்திரிகாவையும் மஹிந்தவையும் ஒப்பிட்டுக்கொள்ள முடிகிறது. இது மீன்பிடி மற்றும் வர்த்தகத் துறைமுகமாக 01.09.2013 அன்று மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்துவைக்கப்பட்டது.

அஷ்ரபின் உதிரத்தில் உதய மாகிய மு.கா. மஹிந்த அரசோடு ஒட்டிக்கொண்டிருந்த காலப்ப குதியில் (2008 ஆண்டுக்குக்கு முன்பு), 2002ஆம் ஆண்டு இலங்கையின் ஆட்சியை தீர்மா னிக்கும் மிகப்பெரிய பேரம்பே கம் பலத்தோடு இருந்த காலப் பகுதியில் அஷ்ரப் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியான இந்த திட்டத்தை மேற்கொள்ளக்கூடிய சாதகமான நிலையுமிருந்தது. இவ்விடயத்தில் மு.கா. இந்த சாத கமாக நிலை எதனையும் பயன்ப டுத்திக்கொள்ளவில்லை என்பது கவலைக்குரிய விடயம்.

இவ்வாறு பெரும் வரலாறுக ளோடு அமைக்கப்பட்ட ஒலுவில் துறைமுகத்தின் அமைவிடம் காரணமாக கடலானது கரையோ ரங்களை விழுங்கிக் கொண்டு ஊரினுள் பிரவேசித்துள்ளது. கடலுக்கும் கரையோரத்திலுள்ள வீடுகளுக்குமிடையில் சுமார் 100 மீற்றர் தூரமே உள்ளது. முன்னர் நீண்ட தூரம் பயணித்தே ஒலுவில் கடற் கரையை காணக்கூடியதாக இருந்தது. இந்நிலமை இன்னும் சில காலங்கள் தொடர்ந்தால் ஒலுவிலிலுள்ள பல வீடுகள் கடலுக்குள் உள் வாங்கப்பட்டு விடும். தேர்தல் காலத்தில் பரு வகால வியாபாரிகள் போன்று ஒலுவிலுக்கு வரும் அரசியல்வாதி கள் மக்களை பம்பாத்து காட்டி விட்டே செல்கின்றனர்.

ஒலுவில் துறைமுகத்தின் அமை விடம் காரணமாக கடலரிப்பு ஏற்படும்போது இது அஷ்ரபினால் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக் குறுதி என்பதால் அது அஷ்ரப் நாமத்துக்கு களங்கத்தை ஏற்படுத் துவதை மறுக்கமுடியாது. அஷ் ரபின் நாமம் களங்கப்படும் போது அதனை என்ன விலை கொடுத்தாவது தீர்க்க வேண்டிய கடப் பாடு முஸ்லிம் காங் கிரஸுக்கு உள்ளதல் லவா?

இத்துறைமுக மானது சரியான சாதக அறிக்கை கள் (Feasibility Report) இன்றி அமைக்கப்பட் டதாகவும் சிலர் கூறுகின்றனர். ஒரு துறைமுகத்தை ச ாதாரணமாக சாதக அறிக்கைகள் இன்றி யாரா லும் நிறுவிட முடியாது. அவ்வாறு அமைக்க இது ஒரு ரூபா இரண்டு ரூபா யில் அமைக்கப்படும் திட்டமுமல்ல. இத் திட்டம் டென்மார்க் அரசாங்கத்தின் 10 வருட கடன் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருந் தது. இந்த விடயத்தை அறிவ தன் மூலம் ஒலுவில் துறைமுக நிறுவலின் முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்ளலாம்.

இது தொடர்பில் சாதக அறிக் கைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட Lanka Hydraulics Institute, இத்துறைமுகம் நிறுவப் பட்டால் அதனை அண்டிய பிரதே சம் கடலரிப்புக்கு உள்ளாகும் எனக் கூறியதை வைத்து சிலர் வேறு பொருள் கொடுக்க விளை கின்றனர்.

செயற்கையாக ஒரு துறைமு கத்தை அமைக்க வேண்டுமா கயிருந்தால் கடலின் ஆழம் அதிகரிக்க வேண்டும். கடல் ஆழத்தை அதிகரிக்கும்போது அதனை அண்டிய கடல் பகுதி அரிப்புக்கு உள்ளாகும். அதா வது ஒரு செயற்கை துறைமுகம் அமைக்கப்படும்போது அதனை அண்டிய பிரதேசம் கடலரிப்புக்கு உள்ளாகும் என்பது வெளிப்படை உண்மை.

இவ்வாறு ஒரு பிரதேசம் கலரிப் புக்கு உள்ளாவது தீர்வற்ற பிரச் சினையுமல்ல. கடலரிப்பு பிரச்சி னை என்பது ஒலுவிலில் உள்ள ஒரு பிரச்சினை மாத்திரமுமல்ல. இலங்கையின் பல பாகங்களிலு முள்ள கரையோரத்தை அண்டி யுள்ள பிரதேசங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது. ஏன் நிந்தவூர், கல்முனை, மருதனை கடற்கரைகள் கூட கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளது. இவற்றுக்கு அணைகளை இடுவதன் மூலம் தடுக்கமுடியும்.

தென் மற்றும் மேல் மாகா ணங்களில் கற்கள் கொண்ட அணைகள் பல கிலோ மீற்றர் தூரத்துக்கு இடப்பட்டு கடலரிப் பிலிருந்து பாதுகாக்கப்படுகிறது. அங்கு இவ்வாறான திட்டங்களை நடை முறைப்படுத்த முடியுமா கயிருந்தால், இங்கு அதனை நடை முறைப்படுத்து பெரிய வி யாவல்ல. (ஒலுவிலில் சில மீற்றர் தூரமே கற்கள் கொண்ட அணைகள் அமைக் கப்பட் டுள்ளது). இவ்வா றான பிரச்சினைகள் ஏற்படு கின்றபோது Lanka Hydraulics Institute போன்ற நிறுவ னங்களிடம் ஒப்படைத்து இதன் தீர்வுக்கான ஆய்வறிக் கைகளை பெற வேண்டும். இதுவே இதன் தீர்வுக்கான சிந்தனையின் முதற்படி. இப்படியே காத்தான்குடி கடலரிப்பு விவகாரம் கிழக்கு முதலமைச்சரால் கையாளப் பட்டது. இவ்விடயத்தில் இந்த நடைமுறை பின்பற்றப் படவில்லை.

இவ்விடயத்தில் கடற் தொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர, துறைமுக மற்றும் கப் பல்துறை அலுவல்கள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க ஆகியோ ருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர்கள் இதன் நிரந்தர தீர்வுக்கு ஆரம்பகட்ட அறிக்கையை தயா ரிக்கும் நோக்கில் ஒரு இணைந்த குழுவை நியமிக்க ஏற்றுக்கொண் டிருந்தனர். இதன்பின்னர் இவ்வி டயத்தில் எதுவித முன்னேற்றமும் காணப்படவில்லை. இது தொடர் பில் முஸ்லிம் மக்கள் பிரதிநிதி கள் தொடரான அழுத்தங்களை வழங்கும்போதே அவர்கள் கரிச னை கொள்வார்கள்.

ஒலுவில் கடலரிப்பு பிரச்சி னை தொடர்பில் முஸ்லிம் அர சியல்வாதிகள் பொடுபோக்குத் தனமாக செயற்படுகிறார்கள் என்பதை வேறு சில விடயங் களை வைத்தும் அறிந்து கொள்ள லாம். இத்துறைமுகத்திற்காக 2008ஆம் ஆண்டளவில் 48 மக்கள் காணிகள் அரசால் நிர்பந் தமாக சுவிகரிக்கப்பட்டிருந்தது. இதுவரை இக்காணிகளுக்கான சரியான நிவாரணம் அரசாங்கத் தால் கூறப்பட்டபடி வழங்கப்பட வில்லை

இதனைக்கூட பெற்றுக்கொ டுக்க இயலாத முஸ்லிம் அரசியல் வாதிகளால் பெருமளவான பணச் செலவுடனும், தொழில்நுட்பங்க ளுடன் தீர்வை பெற்றுக்கொடுக் கக் சாத்தியமான கடலரிப்புக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க முடி யும் என்று நம்ப முடியுமா?

ஒலுவில் கடலரிப்பு பிரச்சி னை எழுவதற்கு முன்பு சுவீகரிக் கப்பட்ட காணிகளின் நிவாரணப் பிரச்சினையே ஒலுவில் மக்களால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தமை இவ்விடத்தில் நினைவூட்டத்தக் கது. இது ஒரு தீர்வற்ற பிரச்சினை யல்ல. தொழில்நுட்பம் மலிந்து கி க்கும் இக்காலத்தில் இதற்கு தீர்வில்லை என்பது நகைப்பிற்குரி யது. எமது முஸ்லிம் அரசியல்வா திகளின் ஆளுமையற்ற தனத்தின் விளைவாகவே இந்த பிரச்சி னை இத்தனை நாள் இழுபட்டுக் கொண்டிருக்கின்றது.

தற்போது ஒலுவில் மக்கள் தங் களது பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள வீதிக்கு இறங்கியுள்ள னர். ஒலுவிலை பொறுத்தமட் டில் அது முஸ்லிம் காங்கிரஸின் கோட்டை. மு.காவின் சேவல் அங்கிருந்துதான் கிழக்கு விடி யலை நோக்கி கூவியது. அஷ்ரப் ஒலுவில் என்ற சிறிய கிராமத்தில் இத் துறைமுகத்தையும், ஒரு பல்கலைக்கழகத்தையும், தான் தங்குவதற்கான விடுதியையும் (கடலரிப்பினால் அந்த விடுதியின் ஆயுளும் இன்று அல்லது நாளை என்றுள்ளது) அமைத்து, அதன் மீதுள்ள பற்றை வெளிப்படுத்தியி ருந்தார்.

தற்போதும் ஒலுவில் மு.காவின் அசைக்க முடியாத கோட்டைகளில் ஒன்று. மக் கள் வாக்களித்துவிட்டு வீதிக்கு இறங்கி தங்களது உரிமைகளை கேட்பதென்றால் இவர்கள் எதற் காக மு.காவிற்கு வாக்களித்தார் கள்?

குறித்த பகுதி வாக்கினூடாக தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அப்பகுதியின் பிரச்சினைக்கான தீர்வை பெற் றுக்கொடுக்க முயலவேண்டும். அதற்கு அரசு மறுத்தால் அவர்கள் தலைமையில்தான் இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க வேண்டும். மக்கள் இவ்வாறான ஆர்பாட்டங்களை அரசுக்கெதிராக முன்னெடுத்துள்ளமை முஸ்லிம் தலைவர்கள் மீது நம்பிக்கையிழந் துள்ள செய்தியையும் கூறுகிறது.

ஒருபுறத்தில் ஒலுவில் மக்கள் சாதாரியமானவர்கள் என்று கூற லாம். முஸ்லிம் கட்சிகள் இன்று வரும் நாளை வரும் என்று கூறிய வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் இற்றைவரை கல்மு னைக்கு வந்து சேரவில்லை. இதனை வைத்து பார்க்கும்போது இவ்வாறான விடயங்களைக் கையாள இவர்களை நம்பிச் செயற்படுவதை விட நேரடியாக அரசின் பக்கம் தலைநீட்டுவது பொருத்தமானது.

இந்த மக்கள் முஸ்லிம் கட்சி களை புறக்கணித்து அரசை நாடிச் செல்கின்றமை பேரினக் கட்சிகள் மீதான ஈர்ப்புக்கும் சிறிதான வித் திடலை செய்வதோடு கிழக்கின் எழுச்சி கோசத்துக்கும் வலுச் சே ர்க்கும்.

தற்போது ஒலுவில் துறைமு கத்தை அகற்ற வேண்டுமென்ற கோசம் மிக இலகுவாக எழுந்து வருகிறது. ஓர் இடத்தின் அபிவிருத்தி என்பது பல விடயங்களில் தங் கியிருக்கும். அதில் ஒன்றுதான் இவ்வாறான துறைமுகங்களை எமது பிரதேசத்தில் உள் வாங் குவதாகும். உலகில் பிரயாண வழிகளில் (Mode of Transport) விமான நிலையங்களுக்கு அடுத்து துறைமுகங்களே (Harbours) முக் கிய இடத்தை வகிக்கின்றன.

தற்போது ஒலுவில் துறை முகமானது மீன்பிடி (Fishery Harbour) துறைமுகமாகவே இயங்கி வருகிறது. இதன்மூலம் பெரிதான நன்மைகளை எமது சமூகம் சுவைத்திட முடியாது. இதன்மூலம் ஆழ்கடல் மீன் பிடியாளர்களுக்கே அதிகம் நன்மை பயக்கும். ஒலுவிலில் பெரும்பாலும் சிறியரக மீன்பி டித் தொழிலாளர்களே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக ஒலுவிலில் சிறிய ரக மீன் பிடியாளர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் பாதிக்கப்பட்ட மீன் பிடியாளர்களுக்கு ஆழ் கடல் மீன் பிடியை நோக்கிய வழி காட்டல்களை காட்டுதல் மற்றும் இதர பல தொழில் வழி காட் டல்களை காட்டுவதன் மூலம் தீர்வை வழங்கியிருக்கலாம். இத னையெல்லாம் நாம் தற்போது தெரிவு செய்துள்ள பிரதிநிதிகளி டமிருந்து எதிர்பார்க்க முடியாது. அரசு மீன்பிடி துறைமுகத்துக்கு இத்தனை பாரிய செலவை செய் திருக்க வேண்டிய அவசியமு மில்லை.

இது வர்த்தக துறைமுகமா கவும் மாறும்போது (Commercial Harbour) இதன் மூலம் இதனை அண்டிய பிரதேசங்கள் துரித அபிவிருத்தியடையும். மக்கள் நடமாட்டம் அதிகரிக்கும். இங் குள்ளவர்கள் கொழும்பு செல் லும் தேவைகள் குறைவடையும். எமது பிரதேசத்தின் வளர்ச்சி க்கு அபரிதமான பங்களிப்பை வழங்கும் என சுருக்கமாக செ ால்லலாம்.

வர்த்தக துறைமுகங்களின் அபி விருத்திக்கு அரசின் பங்களிப்பும் அவசியம். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தேவையான ஏற்றுமதி, இறக்குமதி பொருட் களை இந்த துறைமுகத்தினூடாக கையாளும்போது இத்துறை முகம் பாரிய அபிவிருத்தி பாதை யில் பயணித்திருக்கும்.

ஒலுவில் துறைமுகம் அமைத்து 6 மாதங்கள் கடந்த நிலையில் ஒரு கப்பல் கூட ஒலுவில் துறைமுகத்துக்கு வரவில்லை என்ற நகைப்பு வார்த்தைகள் தான் வந்திருந் தன. (தற்போதைய நிலவரத்தை அறிந்தகொள்ள முயன்றும் அறிந்து கொள்ள முடிய வில்லை). இப்படியிருந்தால் இந்த துறைமுகம் எப்படி முன்னேறும்? இதன் பலாபலன் களை எவ்வாறு அனுபவிக்க முடியும்.

நிலத்தை அகழ்ந்து அமைக் கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகம் இன்று அழகிய முறையில் இயங்கிக்கொண்டிருக் கின்றது. ஒலுவில் துறைமுகத்தை எவ்வாறு சீராக இயக்குவது என்ற திட்டங்களுக்காக அரசை நம்பியிருக்காது, முஸ்லிம் மக் கள் பிரதிநிதிகள் இவ்விடயத் தில் கரிசனை காட்டி அரசுக்கு அழுத்தம் வழங்கிருந்தால், துறைமுகத்தின் பலனை மக்கள் அனுபவித்திருப்பார்கள். அங்கு ஒலுவிலை சேர்ந்தவர்கள் தேனீர் கடை போட்டாவது பிழைப்பை நடாத்தியிருக்கலாம்.

அஷ்ரப் ஒலுவில் துறைமுக திட்டத்தை ஆரம்பித்த காலப்பகு தியில் இது அம்பாறை மாவட்ட தமிழ் மொழி பிரதேசங்களை துண்டாடுவதற்கான சதி போன்ற சில விமர்சனங்கள் எழுந்தன. இவ்வாறான விமர்சனங்களை மக்களிடம் கொண்டு சேர்த்ததில் மு.கா. ஸ்தாபக தவிசாளரான சேகு இஸ்ஸதீனின் பங்கு அபரி தமானது. தற்போது இவ்வாறான கருத்துகளை மேலே கிழப்பி சேகு இஸ்ஸதீனை அத்த தூர நோக்கு சிந்தனாசக்தி கொண்ட வராக சிலர் உருவகம் கொடுக்க முயற்சிக்கின்றனர்.

தற்போது எழுந்துள்ள பிரச்சி னை கடலரிப்பு தொடர்பான பிரச்சினை என்பதால் சேகு இஸ் ஸதீன் போன்றோர் முன்வைத்த குற்றச்சாட்டுக்கும் தற்போதைய பிரச்சினைக்கும் இடையில் எது வித சம்பந்தமுமில்லை. இவ் வாறான திட்டங்களின் மூலம் பேரின மக்கள் எமது பகுதிகளி னுள் நுழைய வாய்ப்புள்ளது. அவர்கள் நுழைந்தாலும் எமது பிரதேசங்களை ஆக்கிரமிப்பதற் கான
சாதகத்தன்மை குறைவு. அவர் கள் அவர்களுக்கென ஒதுக்கப் பட்ட பிரதேசங்களினுள் எல் லைப் படுத்தப்பட்டிருப்பார்கள். எமது பகுதிகளுக்குள் முஸ்லிம் கள் தொழிலில் ஈடுபடக்கூடாது என பெரும்பான்மையின மக்கள் சிந்தித்தால் முஸ்லிம் சமூகத்தின் நிலை என்ன? முஸ்லிம்கள் இவ் வாறான குறுகிய சிந்தனைகளை தூர வீசவேண்டும்.

இதனை அமைச்சர்களான ஹக்கீம், றிஷாத் ஆகியோரது அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் செய்ய முடியாது. மத்திய அரசே இதற்கான பூரண நிதியை ஒதுக்கவேண்டும். ஒலுவில் போன்ற பிரதேசங்கள் முஸ்லிம் கட்சிகளின் ஆளுகைக்கு உட்பட் டிருப்பதால் அங்குள்ள மக்களை முஸ்லிம்கள் கட்சிகளை விட்டும் தூரமாக்கி பெரும்பான்மையின கட்சிகளின் பால் ஈர்க்கும் நோக் கிலும் இப்பிரச்சினையை தீர்க் காது இழுத்தடிப்பு செய்யலாம்.

எமது அரசியல்வாதிகள் பெரும்பான்மையின கட்சிகளை நம்பி பிழைப்பு நடத்துவதால், காரசாரமான எந்த நடவடிக் களையும் அரசுக்கு எதிராக மேற்கொள்ள மாட்டார்கள். இது ஒன்றும் ஐ.நா. சபை சென்றோ அல்லது அரசியலமைப்பை மாற் றியோ சாதிக்கக்கூடிய ஒன்றல்ல. இது தொடர்பில் முஸ்லிம் கட் சிகள் குறிப்பாக மு.கா. மிகவும் கடுமையான நிலைப்பாட்டுக்கு வர வேண்டிய நேரம்.

இப்பிரச்சினையை தீர்க்கவே இப்படி எமது முஸ்லிம் கட்சிகள் பின்வாங்கினால் அரசியல் யாப்பு மாற்ற விவகாரம் போன்றவற்றை முஸ்லிம்களுக்கு பொருத்தமான வகையில் அமைத்துக்கொள்ள அழுத்தம் வழங்குவார்கள் என்று நம்பலாமா.

★★★★

யுத்தத்தால் வெளியேறிய சிங்கள, முஸ்லிம் மக்களை மீண்டும் மீள்குடியேற்றுவோம்

அமைச்சர் டி. எம். சுவாமிநாதன்

(யாழ். பாங்கு ஷிஹான்)

வடமாகாணத்தில் கடந்த கால யுத்தம் காரணமாக இந்த மண்ணை விட்டு வெளியேறிய சிங்கள,முஸ்லிம் மக்களை மீண்டும் மாவட்டத்தில் குடியமர்த்தும் நோக்கிலேயே மீள்குடியேற்றச் செயலணி உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேலதிகமாக எந்தவொரு செயற்பாடுகளையும் எங்கள் செயலணி மேற்கொள்ளாது. இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் மீள் குடியேற்றத்தை நான் பார்த்துக் கொள்கிறேன் என மீள்குடியேற்ற இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் தெரிவித்தார்.

சுன்னாகம் கிழக்கு அம்பாள் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்டப் பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மத்தியில் நடாத்திய வருடாந்த விளையாட்டுத் திருவிழாவின் இறுதிப் போட்டி நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போது சிங்கள, முஸ்லிம் மக்களை மாத்திரம் மீள்குடியேற்றுவதற்காக உருவாக்கியிருக்கும் மீள்குடியேற்றச் செயலணி தொடர்பாக ஊடகவியலாளரொருவர் அமைச்சரிடம் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண மீள்குடியேற்றச் செயலணியின் உருவாக்கம் என்பது முஸ்லிம் மக்களும், சிங்கள மக்களும் இடம் பெயர்ந்து வெளியிடங்களில் வசித்து வரும் நிலையில் அவர்களை மீண்டும் வடமாகாணத்தில் மீளக் குடியமர்த்தும் நோக்கிலேயே ஆகும். ஆகவே, இந்த விடயம் தொடர்பில் யாரும் பேச விரும்பினால் பேசலாம். ஆனால் எதிர்ப்பு தெரிவிக்கவேண்டாம். எந்தவொரு அரசியல் வாதிகளும் எதிர்க்க வேண்டிய தேவையில்லை என்பதைத் தெளிவாகக் கூறி வைக்க விரும்புகின்றேன் எனவும் தெரிவித்தார்.

கிழக்கில் கடும் காற்று மழையால் வேளாண்மைகளுக்கு சேதம்

(நிந்தவூர் சுலைமான் றாபி)

கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்பு அம்பாறை மாவட்டத்தில் இடையிடையே வீசிய பலத்த காற்றுடன் கூடிய கன மழையினால் இம்மாவட்டத்தில் அறுவடைக்குத் தயாரான நிலையிலுள்ள வேளாண்மைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் சிறுபோகத்திற்காக இம்மாவட்டத்தின் அக்கரைப்பற்று, சம்மாந்துறை, காரைதீவு, நிந்தவூர் மற்றும் ஒலுவில் உள்ளிட்ட முக்கிய பிரதேசங்களில் இம்முறை பயிர் செய்யப்பட்டு அறுவடைக்குத் தயாரான நிலையில் உள்ள வேளாண்மைகளே இவ்வாறு நிலத்தில் வீழ்ந்து பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் இந்த வேளாண்மைகள் தொடர்ச்சியாக நிலத்தில் வீழ்ந்து கிடைக்கும் சந்தர்ப்பத்தில் மீண்டுமொரு தடவை இம்மாவட்டத்தில் கன மழை பெய்தால் இவ்வேளாண்மைகள் முற்றாக பாதிக்கப்படுவதோடு, பதர் நிலைமையினையும் அடையுமென விவசாயிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். இதுதவிர அறுவடை நேரத்திலும் இவ்வேளாண்மைகளை அறுவடை செய்வதற்கு கூடுதல் பிரயத்தனங்களை மேற்கொள்வதோடு, அதிக பணங்களை செலவு செய்யவேண்டிய நிலை ஏற்படுமெனவும், இவ்வாறான நிலைமைகளில் இவ்வேளாண்மைகளை அறுவடை செய்வதற்கு தொழிலாளர்களும், வேளாண்மை அறுவடை இயந்திர உரிமையாளர்களும் தயக்கம் காட்டக்கூடுமெனவும் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

உலமாக்கள் மாற்று மொழியில் புலமைமிக்கவர்களாக மாற வேண்டும்

முப்பெரும் விழாவில் றிசாத்

(சுஜப் எம்.காசிம்)

உலமாக்கள் தமக்கு அமானிதமாகக் கிடைக்கும் பொறுப்புக்களையும், வளங்களையும் பொருத்தமான வகையில் நீதமாகப் பயன்படுத்த வேண்டுமென்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

புத்தளம், தில்லையடி முஹாஜிரீன் அரபுக் கல்லூரியின் முப்பெரும் விழாவில் பிரதம விருந்தினராக அமைச்சர் றிசாத் பங்கேற்று உரையாற்றினார். முன்னதாக அங்கு இடம் பெற்ற கண்காட்சியையும் அமைச்சர் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். கல்லூரியின் அதிபர் மௌலவி அஷ்ரப் முபாரக் அல்-ரஷாதி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், அதிதிகளாகப் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எச்.எம்.நவவி, இஷாக் ரஹ்மான், உலமாக்களான அஷ்ஷெய்க் அகார் முஹம்மத், அப்துல்லாஹ் ஹஸரத், மௌலவி பி.ஏ.சுபியான் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான அப்துல் மஜீத், டாக்டர் இல்யாஸ், முன்னாள் உபவேந்தர் எஸ்.எம். இஸ்மாயில் ஆகியோர் உட்பட வெளிநாட்டு, உள்நாட்டு மார்க்க அறிஞர்கள் பங்கேற்றனர்.

அமைச்சர் றிசாத் இங்கு கூறியதாவது,

உலமாக்கள் முஸ்லிம் சமுதாயத்தின் ஒப்பற்ற வழிகாட்டிகள். உலமாக்களின் பண்பையும், நடத்தையையும் முஸ்லிம்கள் பின்பற்றக்கூடிய வகையில் அவர்களின் வாழ்க்கை தூயதாக அமையவேண்டும். ஆன்மீக ரீதியாக முஸ்லிம்கள் மேம்பாடு அடைவது பூரணமாக உலமாக்களின் வழிகாட்டலிலேயே தங்கி இருக்கின்றது.

நமது நாட்டிலே மதரஸாக்கள் அதிகமாக இருக்கின்றன. வருடாவருடம் இந்த மதரஸாக்களிலிருந்து மௌலவிமார்களும், ஹாபிழ்மார்களும் பட்டம்பெற்று வெளியேறுகின்றனர். இவர்கள் தமது மார்க்கக் கல்வியை அவற்றுடன் மாத்திரம் மட்டுப்படுத்திவிடக் கூடாது. மேலும் படிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. குறிப்பாக உலமாக்களுக்கு ஏனைய மொழிகளிலும் பாண்டித்தியம் தேவைப்படுகின்றது. பிறமதத்தினருக்கும், பிறமொழி பேசுவோருக்கும் இஸ்லாத்தையும், முஸ்லிம் சமூகத்தையும் பற்றிய உண்மையான விடயங்களை கூறமுடியும். வேற்றுமொழியில் நாம் சரளமாகப் பேசுவதன் மூலம் இஸ்லாத்துக்கெதிரான சவால்களை முறியடிக்க முடியும்.

நமது நாட்டிலுள்ள மதரஸாக்கள் முறையான பாடத்திட்டத்தின் கீழ், ஒரே குடையின் கீழே கொண்டுவரப்படவேண்டியதன் அவசியத்தை நாம் அடிக்கடி வலியுறுத்தி வருகின்றோம். இந்தவகையில் இந்த முயற்சியை முன்னெடுப்பதற்கு ஜம்மியத்துல் உலமா முன்வர வேண்டும். இதன் மூலம் தேர்ச்சிபெற்ற உலமாக்களை நமது சமூகத்துக்கு வழங்கமுடியும்.

முஸ்லிம்களின் சவத்தொகை விகிதாசாரத்துடன் ஒப்பிடும்போது நாட்டின் உயர்துறைகளில் பணியாற்றும் நமது சமூகம் சார்ந்தவர்களின் விகிதம் குறைவான நிலையிலேயே காணப்படுகின்றது. கல்வித்துறையிலே முஸ்லிம் சமூகம் காட்டும் ஆர்வம் போதாது. இவ்வாறான முயற்சிக்கு உலமாக்கள்தமது பிரசங்கங்களை பயன்படுத்த முடியும். அத்துடன் ஒழுக்கமுள்ள, உயரிய சமூகமொன்றை உருவாக்குவதற்கு உலமாக்கள் காத்திரமான பணியை ஆற்ற முன்வர வேண்டும் என அமைச்சர் தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேச சபையை நகர சபையாக தரமுயர்த்தவும்

பொதுநல அமைப்புக்கள் கோரிக்கை

(எம்.சி.அன்சார், சம்மாந்துறை)

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேச சபையினை எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னர் நகர சபையாக தரமுயர்த்தப்பட சம்மாந்துறை பிரதேச அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச பொதுநல அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன .

தற்போது சம்மாந்துறை பிரதேச சபையானது 51 கிராம சேவையாளர் பிரிவினையும், 136 சதுர கிலோ மீற்றர் பரப்பளவினையும், 85,000 மக்கள் தொகையினையும், 43,000 ஆயிரம் வாக்காளர்களையும், 17,925 குடும்பங்களையும், 30 கிராமங்களையும், 09 உறுப்பினர்களையும் கொண்டதாகும்.

கிழக்கிலங்கையில் 1947ஆம் ஆண்டு பட்டின சபையாகத் தரமுயர்த்தப்பட்ட ஒரேயொரு சபை சம்மாந்துறை ஆகும். சம்மாந்துறை பட்டின சபை, சம்மாந்துறைக் கிராம சபை, மல்வத்தை, நாவிதன்வெளி கிராம சபை மற்றும் இறக்காமம் கிராம சபை ஆகிய நான்கு சபைகளாக இயங்கி வந்தன.

1968ஆம் ஆண்டில் உள்ளூராட்சி சபைகளின் மீள் எல்லைப் பிரிவுகளின் பிரகாரம் சம்மாந்துறை, நாவிதன்வெளி மற்றும் மல்வத்தை என மூன்று கிராம சபைகளாக அமையப் பெற்றன. இதன் மூலம் சம்மாந்துறை ஒரு பட்டின சபையாகவும், ஒரு கிராம சபையாகவும் செயற்பாத் தொங்கின.

சம்மாந்துறைப் பிரதேச சபையின் வரலாறு 65 வருடங்களைத் தாண்டிய மிகப் பழமையானது. பிரதேச சபையின் கடந்தகால வரலாற்றில் என்றுமில்லாதவாறு மக்களை நோக்கி தனது சேவைகளை முனைப்புடன் செயலாற்றுவதை காணமுடிகின்றது. கிழக்கு மாகாணத்தில் வெளிப்படைத்தன்மையுடைய கட்சி பாதுகாப்பற்ற உள்ளூராட்சி மன்றம் என்ற பெருமையும் சம்மாந்துறை பிதேச சபைக்கு உண்டு.

எனவே, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னர் சம்மாந்துறை பிரதேச சபையை நகர சபையாக தரமுயர்த்தப்பட வேண்டும் அதற்கான நடவடிக்கைகளை கட்சி வேறுபாடுகளின்றி பிரதேச அரசியல்வாதிகள் மேற்கொள்ள வேண்டும் என பொதுநல அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

"திறனொளி" சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு

சம்மாந்துறை பிர்தௌஸ் சமூக நலன்புரி அமைப்பினால் வெளியிடப்படும் திறனொளி மாதாந்த சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் சம்மாந்துறை பிர்தௌஸ் ஆங்கில பாலர் பாடசாலை வளாகத்தில் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் அறிவிப்பாளருமான கலைச்சுடர் ஏ.சி.நௌஷாதின் நெறிப்படுத்தலில் கலைத்தென்றல் ஏ.அகமட் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூரின் பிரத்தியேக செயலாளர் சட்டத்தரணி எம்.எம்.ஜௌபீர் மற்றும் பொறியியலாளர் எம்.எஸ்.எம்.நவாஸ், நிருவாக உத்தியோகத்தர் அப்துல் றஹீம் உட்பட கவிஞர்கள், கவிதாயினிகள் மற்றும் கலை இலக்கிய ஆர்வலர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

படத்தில் அதிதிகளுக்கு சஞ்சிகையின் பிரதிகள் வழங்கி வைக்கப்படுவதையும் பிரதம அதிதி உரையாற்றுவதனையும் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

மரக்கன்றுகள் நடும் வேலைத்திட்டம்

(திகாமடுல்ல நிருபர்)

பலன்தரும் மரக் கன்றுகளை நடும் வீட்டுக்கு வீடு மரம் எனும் வேலைத்திட்டம் ஒன்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பித்துள்ளது. அக்கரைப்பற்று 18 கிராம சேவகர் பிரிவை மையப்படுத்தி அக்கரைப்பற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாவட்ட காரியாலயத்தில் அமைப்பாளரும், முன்னாள் மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவருமான எஸ்.எல்.எம்.ஹனிபா மதனி தலைமையில் இவ் வீட்டுக்கு வீடு மரம் வேலைத்திட்டம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

மேலும் அமைப்பாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா மதனி இளைஞர் அணி உறுப்பினருக்கும், நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் இணைப்பாளர் ஏ.எல்.மர்ஜூன் மாதர் அணி உறுப்பினருக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

கல்முனை நூலகங்கள் மாலை வரை இயங்கும்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பொது நூலகங்களின் வாசிப்பு பிரிவுகளை தினசரி மாலை 6.00 மணி வரை திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.வாசகர்களின் வேண்டுகோளின் பேரில் கல்முனை மாநகர சபையின் ஆணையாளர் ஜே.லியாகத் அலி விடுத்த பணிப்புரைக்கமைவாக சம்மந்தப்பட்ட பொது நூலகங்களின் நூலகர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன் பிரகாரம் இதுவரை காலமும் மாலை 4.30 மணியுடன் மூடப்பட்டு வந்த கல்முனை, மருதமுனை, சாய்ந்தமருது மற்றும் கரைவாகு மேற்கு ஆகிய நான்கு பொது நூலகங்களின் வாசிப்பு பிரிவுகளும் தினசரி காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை திறந்திருக்கும் என ஆணையாளர் தெரிவித்தார்.

இப்புதிய நேர அட்டவணை நேற்று திங்கட்கிழமை தொடக்கம் அமுலுக்கு வந்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

மத்திய மாகாணத்தில் டெங்கு நோயாளர்களின் அதிகரிப்பு

(வத்துகாமம் நிருபர்)

மத்திய மாகாணத்தில் கண்டி, மாத்தளை, மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் இவ் வருடம் ஜூலை மாதம் வரை 3070 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்தில் 2290 டெங்கு நோயாளிகளும், நுவரெலியா மாவட்டத்தில் 259 நோயாளிகளும், மாத்தளை மாவட்டத்தில் 521 நோயாளிகளும் பதிவாகி உள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் ஜனவரி மாதத்தில் 337 நோயாளிகளும், பெப்ரவரி மாதத்தில் 207 நோயாளிகளும், மார்ச் மாதத்தில் 93 நோயாளிகளும், ஏப்ரல் மாதத்தில் 109 நோயாளிகளும் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவிக்கின்றது. அதேவேளை மே மாதத்தில் 152 நோயாளிகளும் ஜூன் மாதத்தில் 502 நோயாளிகளும் ஜூலை மாதத்தில் 892 நோயாளிகளும் பதிவாகி உள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் ஜனவரி மாதத்தில் 44 நோயாளிகளும், பெப்ரவரி மாதத்தில் 22 நோயாளிகளும், மார்ச் மாதத்தில் 20 நோயாளிகளும், ஏப்ரல் மாதத்தில் 31 நோயாளிகளும் மே மாதத்தில் 16 நோயாளிகளும் ஜூன் மாதத்தில் 38 நோயாளிகளும் ஜூலை மாதத்தில் 88 நோயாளிகளும் பதிவாகி உள்ளனர்.

மாத்தளை மாவட்டத்தில் ஜனவரி மாதத்தில் 51 நோயாளிகளும், பெப்ரவரி மாதத்தில் 42 நோயாளிகளும்,மார்ச் மாதத்தில் 33 நோயாளிகளும், ஏப்ரல் மாதத்தில் 20 நோயாளிகளும்,மே மாதத்தின் 29 ஜூன் மாதத்தில் 89 நோயாளிகளும் ஜூலை மாதத்தில் 521 நோயாளிகளும் பதிவாகி உள்ளதாகவும் சுகாதார அமைச்சின் டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாதயாத்திரை மூலம் மஹிந்தவுக்கு 4ஆவது தோல்வி

அமைச்சர் கபீர் ஹாசிம்

தேர்தல்கள் பலவற்றில் தோல்வி கண்ட மஹிந்த ராஜபக்ஷ பாதயாத்திரை மூலம் நான்காவது தோல்வியையும் சந்தித்துள்ளதாக ஐ.தே.க பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

ரம்புக்கனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது, ஜனாதிபதித்தேர்தல் பொதுத்தேர்தலில் தான் வெற்றியடைவதாக மஹிந்த மார்தட்டினார். மேதினத்தில் மிகப்பெரும் பலத்தைக்காட்டுவதாக சவால் விட்டனர். அதிலும் மிகப் பெரும் தோல்வியே அவர்களுக்குக் காத்திருந்தது.

மேலும், தோல்வியைச் சந்தித்தவர்கள் மீண்டும் பாதயாத்திரை மூலம் அரசை கவிழ்ப்பதற்கு முயற்சித்தார்கள் என்றும்,அதுவும் தோல்வியிலேயே முடிந்துள்ளது. எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.நாட்டின் நிலைமையை மக்களுக்கு இன்று நன்றாக புரிந்துகொள்ள முடியும்.

இன்று இலங்கையில் சட்டத்தின் ஆட்சி நடப்பதாலே அவர்களது பாதயாத்திரைக்கும் பாதுகாப்பு வழங்கினோம் இது தான் நல்லாட்சியின் கொள்கை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புலமைப்பரிசில் மாணவர்களுக்கு காவத்தையில் இலவச செயலமர்வு

(ஹட்டன் க.கிஷாந்தன்)

காவத்தை பிரதேசத்திலிருந்து தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்ற உள்ள மாணவர்களுக்கு இலவச செயலமர்வு, காவத்தை ஸ்ரீ கிருஷ்ணா தமிழ் மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

காவத்தை பிரதேசத்திலிருந்து தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி காவத்தை ஒபாத்த விக்னேஷ்வரா தமிழ் வித்தியாலய ஆசிரியர் டி.கோபியன், வருடா வருடம் மேற்படி இலவச செயலமர்வை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இச்செயலமர்வில் காவத்தை பிரதேசத்திலிருந்து தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்ற உள்ள 300க்கும் அதிகமான மாணவர்கள் இதில் கலந்துகொண்டதாக ஆசிரியர் டி.கோபியன் தெரிவித்தார்.

பாதயாத்திரையின் புனிதத்தன்மையை எதிரணி சீர் குலைத்துள்ளது

இம்ரான் மஹ்ரூப் எம்.பி.குற்றச்சாட்டு

(ஏ.எஸ்.எம்.தாணீஸ்)

ஒரு காலத்தில் பாத யாத்திரை செல்வ தென்பது தமது இறுதிக் காலத்தில் நன்மை செய்வதற்காக என்றிருந்தது. இன்று எடுத்த எடுப்பில் எல்லாவற்றுக் கும் பாத யாத்திரை என்று ஒரு கூட் டம் கிளம்பி, பாத சென்று அதனு டைய புனித தன்மைக்கு இழுக்கினை ஏற்படுத்தி வருகின்றது. இது நல்லாட்சி யின் செயற்பாடுகளை நாசப்படுத்துகின்ற கூட்டமென திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

தோப்பூரில் இடம் பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் புனர் நிர்மாணம் தொடர்பாக தோப்பூர் ஆதரவாளர்களை சந்தித்து உரையாற்றும் போது இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றும் போது ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் கடந்த 20 வருடங்களாக எதிர்க் கட்சியில் இருந்த படியினால் வேலைவாய்ப்பு விடயங்க ளில் எமது கட்சி ஆதரவாளர்கள் உண் மையில் பாதிக்கப்பட்டிருக்கின்றார் கள்.சமூர்த்தி வேலை வாய்ப்பு கூட எமது கட்சி ஆதரவாளர்களுக்கு கிடைக்க வில்லை. தற்போது நல்லாட்சி அரசாங்கம் அமைந்து தமது சேவைகளை மெது மெதுவாக தவழ்ந்து செய்து கொண்டிருக் கின்றது..அத்தோடு, இன்னும் குறிப்பிட்ட காலத்தில் தனது நடையினை ஆரம்பித்து ஓட்டம் எடுக்கும் போது நிச்சயமாக எமது கட்சி ஆதரவாளர்களுக்கு விமோசனம் கிடைக்கும்.

அவ்வாறு விமோசனம் கிடைக்கும் காலத்தில் நான் எனது சேவைகளை கட்சி இனம் மதம் என்கின்ற வேறுபாடு களுக்கு அப்பால் செய்வேன்.ஏன் என்றால் எனது தந்தை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது அவரது அரசியல் பயணத்தில் மூவின மக்களும் அவருக்கு ஆதரவு வழங்கியுள்ளதோடு, எனது அரசியல் பயணத்திற்கும் ஒத்துழைப்பினை வழங்கியுள்ளார்கள். ஆதலால் எனது எதிர்கால அரசியல் பயணம் மூவின மக்களையும் ஒன்றிணைத்ததாக இருக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு மத்தி இந்து மகா வித்தியாலய மாணவர் தலைவர் கௌரவிப்பு மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய மாணவர் தலைவரொருவருக்கு சின்னம் அணிவிப்பதையும் கௌரவ அதிதியாக கலந்து கொண்ட மாகாண சபை உறுப்பினர் ஏ.ஜே.எம். பாயிஸ் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதையும் படங்களில் காணலாம். அதிபர் கே. பத்மராஜனும் படத்தில் காணப்படுகிறார். **(படம் - எம்.எஸ்.எம். முன்தஸிர்)**

தொழில் சந்தையில் தொழில் வாய்ப்பை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம்

(எம்.எஸ்.எம். முன்தஸிர்)

நாட்டின் தேசிய தொழிற்சந்தையில் தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்காள வேலைத்திட்டமொன்று திறன்விருத்தி தொழிற்பயிற்சி அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் ஆலோசனையின் பேரில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தை அமுலாக்குவதற்கான நடவடிக்கைகளை திறன் அபிவிருத்தி தொழிற்பயிற்சி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

அரச மற்றும் தனியார் துறைகளை ஒன்றிணைத்து நிர்மாணத்துறை, தகவல் தொழில்நுட்பம், இலகு பொறியியல்துறை உள்ளிட்ட நான்கு துறைகளுக்கு நான்கு கவுன்சில்கள் இத் திட்டத்துக்காக அமைக்கப்பட்டுள்ளன.

இந்த கவுன்சில் உறுப்பினர்களின் பங்களிப்புடனான விஷேட கூட்டமொன்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையில் அமைச்சில் இடம்பெற்றது. இதில் அமைச்சு அதிகாரிகள் உள்ளிட்ட துறைசார் நிபுணர்களும் கலந்து கொண்டனர்.

மேற்படி கவுன்சிலின் ஆலோசனையின் பிரகாரம் பாடநெறிகள், பயிற்சி மற்றும் தொழில்வாய்ப்பு வழிகாட்டல் நடவடி க்கைகள் தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

முஸ்தபா சர்வதேச பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கிளையின் சட்ட மாணவர் ஏற்பாடு செய்த முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பிலான இலவச கருத்தரங்கு கோல்பேஸ் டெரஸ் பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடை பெற்றது. இதில் வக்பு சட்டம் பற்றி முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதியும் வக்பு நியாய சபை தலைவருமான யு.எல்.ஏ.மஜீத் விரிவுரை நிகழ்த்துவதையும் கலந்துகொண்ட மாணவர்கள் சிலரையும் படங்களில் காண்க.

(படம்- எஸ்.ஏ.கரீம்)

காணி மத்தியஸ்தர்கள் 46 பேர் கிழக்கில் நியமனம்

(திருகோணமலை எஸ்.எம்.ரஸீன்)

கிழக்கு மாகாணத்தில் நிலவுகின்ற காணி தொடர்பான பிரச்சினைகளை சுமூகமான முறையில் தீர்க்கும் வகையில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச்சேர்ந்த 46 பேருக்கு காணி மத்தியஸ்தர்கள் நியமனம் வழங்கும் நிகழ்வு அண்மையில் (29) திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் வழங்கி வைக்கப்பட்டது.

இணக்கசபை ஆணைக்குழுவிற்கு வருடந்தோறும் பல பிரச்சினைகள் வருவதாகவும் இவற்றுள் அதிகமானவை நிதி கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் இணக்கசபை செயற்பாடுகள் மூலம் மக்களது அநேக பிரச்சினைகள் சுமூகமான முறையில் தீர்க்க வாய்ப்பு ஏற்படுவதாகவும் இதன்போது நீதியமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் திருமலை மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ.புஷ்பகுமார, நீதியமைச்சின் செயலாளர் பத்மசிறி ஜயமான்ன, காணி அமைச்சின் செயலாளர் மஹாநாம உட்பட இணக்கச பை ஆணைக்குழுவின் அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தார்கள்.

தீப்பெட்டியின் விலை அதிகரிப்பு

தீப்பெட்டி ஒன்றின் விலை 1 ரூபா வால் நேற்று முதல் அதிகரிக்கப்பட் டுள்ளதாக இலங்கை பாதுகாப்பான தீப் பெட்டி உற்பத்தியாளர் சங்கம் அறிவித் துள்ளது. அதனடிப்படையில், தீப் பெட்டி ஒன்றின் புதிய விலை 6 ரூபாவாகும்.

இளைஞர்களின் சக்தி கலந்துரையாடல் நிகழ்வு

(ஹட்டன் க.கிஷாந்தன்)

மாத்தளை சமூக வலுவூட்டல் நிலையத்தின் தலைவர் சஞ்சய காந்தி ஏற்பாட்டில் சமூக மாற்றத்திற்கான இளைஞர்களின் சக்தி எனும் தலைப்பில் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மாத்தளை சமூக வலுவூட்டல் நிலைய காரியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர்.ராஜாராம், பிரஜா சக்தி நிலையங்களின் பணிப்பாளர் முத்துகுமார், நுவரெலியா மஸ்கெலியா இளைஞர் பாராளுமன்றத்தின் உறுப்பினர் பொன்னம்பலம் சதீஸ்குமார் உட்பட மாத்தளை நகரை பிரதிநிதித்துவம் செய்கின்ற இளைஞர் யுவதிகளும் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் அரசியலின் இயலாமை நூல் வெளியீட்டு விழா

சாய்ந்தமருதைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளரும் பன்னூலாசிரியருமான ஹாதிபுல் ஹஸ்தா எம்.எம்.எம். நூறுல்ஹக் எழுதிய முஸ்லிம் அரசியலின் இயலாமை நூலின் இரண்டாம் பதிப்பு வெளியீட்டு விழா எதிர்வரும் 07 ஆம் திகதி பிற்பகல் 04 மணிக்கு கொழும்பு தெமட்டகொட அகில இலங்கை வை.எம்.ஏ. மண்டபத்தில் முஸ்லிம் மீடியா போரத்தலைவரும் நவமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான அல்ஹாஜ்.என்.எம் அமீன் தலைமையில் நடைபெறும்.

பிரதம அதிதியாக வர்த்தக கைத் தொழில் அமைச்சர் றிஷாத் பதியுதீனும் கௌரவ அதிதிகளாக இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ், பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ் அமீர் அலியும் விசேட அதிதிகளாக அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தலைவர் ஏ.எம். ஜெமீல் முன்னாள் பிரதி அமைச்சரும் ஜனநாயக மக்கள் காங்கிர ஸின் ஸ்தாபகத் தலைவருமான பிரபா கணேஷன் ஆகியோர் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

மற்றும் அதிதிகளாக ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கூட்டமைப்பு தலைவர் என். குமார குருபரன் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தவிசாளர் பொறியியலாளர் அப்துல் ரஹ்மான், உலமாக் கட்சி தலைவர் முபாறக் அப்துல் மஜீத் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

நூலின் முதற்பிரதியை இலக்கிய புரவலர் ஹாஸிம் உமர் பெறும் அதேவேளை, தொடக்க உரையை கவிஞர் அஷ்ரப் ஷிஹாப்தீனும் கவி வாழ்த்தினை கவிஞர் இப்னு அஸுமத்தும், நூல் திறனாய்வை ஓய்வு நிலை உதவிக் கல்விபணிப்பாளர் கலாபூஷணம் ஏ.பீர் முஹம்மதும் நிகழ்த்துவர்.

அண்மையில் லாவோஸில் நடைபெற்ற வெளிவிவகார அமைச்சர் களின் மகாநாட்டில் இலங்கை வெளி விவகார அமைச்சை பிரதிநிதித்துவப் படுத்தி பங்குபற்றிய வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (ஆசிய பசுபிக்) அமீர் அஜ்வாட் மியன் மார் வெளிவிவகார அமைச்சர் அவுஸான் சுக்கியை சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

கல்வி கற்றவர்கள் சமூகத்தில் முன்மாதிரியாக செயற்படவேண்டும்

அஷ்ஷெய்க் எம்.எஸ். முஹம்மது றஷீத்

(பி. முஹாஜிரீன்)

சமூகத் தலைவர்கள் தான் சார்ந்த சமூகத்தின் வழிகாட்டிகளாக செயற்பட வேண்டுமென அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் ஒன்றியத்தின் (ஜம்மியதுஷ் ஷபாப்) பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ். முஹம்மது றஷீத் (றியாதி) தெரிவித்தார்.

ஒலுவில் ஸஹ்வா மகளிர் அறபுக் கல்லூரியின் 2ஆவது பொதுப் பட்ட மளிப்பு விழா நேற்றுமுன்தினம் ஒலுவில் அல்- ஹம்றா மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிரிய ஆலோசகரும், ஸஹ்வா மகளிர் அறபுக் கல்லூரியின் முகாமைத்துவ சபை யின் தலைவருமான ஏ.எல்.எம். முஸ்தபா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், அஷ்ஷெய்க் எம்.எஸ். முஹம்மது றஷீத் (றியாதி) தொடர்ந்து உரையாற்றுகையில்,

தான் கற்ற கல்வியை பிறருக்கு உதவக் கூடிய வகையில் செயற்படுத்துவதை நாம் ஒவ்வொருவரும் குறிக்கோளாக கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் அக்கல்வியின் பிரதிபலனை அடைய முடியும். கல்வி கற்றவர்கள் சமூகத்தில் ஒரு முன்மாதிரியாக செயற்படுவதன் மூலம் தான் ஒரு சிறந்த சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.

முஸ்லிம் சமூகம் நமது நாட்டில் பல கல்வியலாளர்களை உருவாக்கி அதன் மூலம் நாட்டிற்கும், சமூகத்திற்கும் பெரும் பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

இக்கல்லூரி பல இடர்களைத் தாண்டி இலங்கையில் நாலா பகுதிகளிலுமுள்ள பெண் பிள்ளைகளுக்கு ஒரு சிறந்த மார்க்கக் கல்வியை ஊட்டி வருகிறது. நாம் கற்ற கல்வியைக் கொண்டு அல்லாஹ்வின் பொருத்தத்திற்கு உரியதாக சிறந்த முறையில் அவற்றைப் பயன்படுத்துகின்றபோது நமது எண் ணங்கள் வெற்றியளிப்பதுடன் எல்லா செயற்பாடுகளும் நமக்கு நிம்மதியையும் திருப்தியையும் தரும்' என்றார்.

இந்நிகழ்வில், ஸஹ்வா அறபுக் கல் லூரியின் பொது அதிபரும் ஜம்மியதுல் உலமா சபையின் பத்வா குழு செயலாள ருமான அஷ்ஷெய்க் ஐ.எல்.எம். ஹாலிம் ஸுசி (மதனி), அறபுக் கல்லூரிகளின் பொதுச்சபைத் தலைவர் அஷ்ஷெய்க் எம்.எஸ். ஆப்துல் ஹபீல் (ஷர்க்கி), ஜம்இய்யதுல் கிம்மா நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எம். எஸ். ஹாறூன் (ஸஹ்வி), அஷ்ஷெய்க் எம்.எஸ். றஷாத் (ஸஹ்வி), கல்எளிய முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பிரதி அதிபர் அல் ஆலிமா என். இஸ்ஸத் மஹீலா ஆகியோர் உட்பட ஏராளமான பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

105 மாணவிகள் மௌலவியா பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்ட துடன் ஒவ்வொரு பிரிவிலும் சிறப்புத் தேர்ச்சிபெற்ற 9 மௌலவியாக்கள் விருதுகள் வழங்கி பாராட்டப்பட்டனர். மேலும் கல்லூரியின் வரலாறுகளும் விபரங்களும் உள்ளடக்கிய நினைவு மலர் ஒன்றும் இங்கு வெளியிட்டு வைக்கப்பட்டது.

பெயர் மாற்றம்

பழைய அரச அதிபர் காரியாலயவீதி, பாக்கியவத்தை,பொத்துவில் 13ஐச் சேர் ந்த மிஸ்கீன்பாவா ஹிதாயா ஆகிய நான் எனது பிள்ளையான வடிவேல் நிலவரசன் இன் பெயரை வடிவேல் அப்துல்லா என மாற்றிக் கொண்டு இனிவரும் காலங்க ளில் சகல ஆவணங்களிலும் புதிய பெய ரையே பயன்படுத்துவேன் என இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு க்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

மிஸ்கீன்பாவா ஹிதாயா- தாய்

காபூல் விடுதியில் தாக்குதல்:

7 மணி நேர சண்டைக்குப் பின் 3 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

ஆப்கான் தலைநகர் காபூலில் வெளிநாட்டினர் தங்கியிருக்கும் நட்சத்திர விடுதியை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

7 மணி நேர போராட்டத்துக்குப் பின்னர் தாக்குதலில் ஈடுபட்ட மூன்று பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் புறநகர் பகுதியில் வெளி நாட்டினர் தங்கியிருக்கும் விடுதியின் மதில் சுவருக்கு அருகே நேற்று திங்கட்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் வாகனத்தில் வைக்கப்பட்ட சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது காபூல் நகரம் முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருளில் மூழ்கியது.

விடுதியின் மதில் சுவரைத் தாண்டி உள்ளே நுழைந்த பாதுகாப்புப் படையினர் தீவிரவாதிகள் இருவரை சுட்டுக் கொன்றனர். இத்தாக்குதலில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

இக்குண்டுவெடிப்பு தாக்குதலைப் பொறுப்பேற்ற தலிபான் தீவிரவாதிகள் வெளிநாட்டினரை மையபடுத்தி இத்தாக்குதலை நிகழ்த்தியதாக செய்தி வெளியிட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது கடந்த ஜனவரி முதல் ஜூன் வரை ஆப்கனில் நடத்தப்பட்ட பல்வேறு பயங்கரவாதத் தாக்குதல்களில் 1,601 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அலப்போவில் வலுக்கும் மோதல்
3 இலட்சம் அப்பாவிகள் பரிதவிப்பு

சிரியாவில் அலப்போ நகரை கற்றி முற்றுகையிட்டுள்ள அரச படைகளை எதிர்த்து புரட்சி படையினர் தாக்குதல் மேற்கொண்டுவருகின்றனர்.

ஐ.நா. அறிக்கையின் படி இந்நகரில் 3 இலட்சம் மக்கள் சிக்கியுள்ளனர்.

இவர்கள் உணவு, மருந்து போன்ற அத்தியவசிய தேவைகளை நிறை வேற்றிக் கொள்வதில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர். அல் - கைதாவுடன் இணைந்திருந்திருந்து பின்னர் பிரிந்துபோய், தற்போது ஜப்ஹத பத்ஹ் அல்சாம் மற்றும் அஹ்ரார் அல்சாம் ஆகிய போராட்ட இயக்கங்கள் தென்மேற்கு பகுதியிலுள்ள அரச கட்டுப்பாட்டு பகுதிகளை கைப்பற்றியுள்ளன.

அரச தொலைகாட்சியை போராளிகள் கைப்பற்றியுள்ளதாக சிரிய அரச படை உறுதிப்படுத்தியுள்ளதோடு எனினும், ஹிக்மா பாடசாலையை கைப்பற்றிய போராளிகள் துரத்திய டிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

தகவல் வழங்குவோர் மூவம் தகவல்

களை சேகரித்து வரும், பிரித்தானியாவை தளமாகக் கொண்டியங்கும் சிரிய மனித உரிமை கண்காணிப்பகம், அலப்போவில் போராளிகளுக்கும் அரச தரப்பு படையினருக்கும் மோதல் இடம்பெற்றுவருவதை உறுதிப்படுத்தியுள்ளது.

உதவித் தொகையுடன் அகதிகளை தாய் நாட்டுக்கு திருப்பியனுப்பும் ஆஸி.

தலா ரூ.13 இலட்சம் உதவித் தொகையுடன் அகதிகளை சொந்த நாட்டுக்கு திருப்பியனுப்ப அவுஸ்திரேலியா முயற்சி மேற்கொண்டுள்ளது.

உள் நாட்டு போர் நடைபெற்ற சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கை உள்ளிட்ட நாடுகளிலிருந்து அகதிகளாக அவுஸ்திரேலியா சென்றுள்ள பலர் தங்களுக்கு தஞ்சம் வழங்க வேண்டும் என அந்நாட்டு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனால் அவர்கள் மனுஸ் தீவிலுள்ள தடுப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். பல ஆண்டுகளாக இவர்கள் அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளதற்கு பப்புவா நியுகினியா உச்ச நீதிமன்றம் சமீபத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

அகதிகளை அடைத்து வைத்திருப்பது சட்ட விரோதம். எனவே அந்த முகாம்களை மூட வேண்டும் எனவும் உத்தரவிட்டது. இதனால் அகதிகளை அவர்களது சொந்த நாட்டுக்கே திருப்பியனுப்ப அவுஸ்திரேலியா அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கு முன்பு ரூ.61/2 இலட்சம் உதவித் தொகை வழங்கி அவர்களை அனுப்ப இருப்பதாக அவுஸ்திரேலியா தெரிவித்தது. உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு பின்னர் தற்போது ரூ.13 இலட்சம் வழங்கி அவர்களை அனுப்ப முயற்சி மேற் கொண்டுள்ளது. அதற்கான பேச்சு நடந்து வருகிறது. அதற்காக அகதிகள் நடவடிக்கை குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஜெயா எனது கன்னத்தில் அறைந்தார் மாநிலங்களவையில் சசிகலா கண்ணீர்

(திருச்சி சாஹுல் ஹமீது)

தமிழக முதல்வரும் அ.தி.மு.க. பொதுச்செயலருமான ஜெயலலிதா தனது கன்னத்தில் அறைந்ததாக ராஜ்ய சபாவில் திடுக்கிடும் புகார் தெரிவித்த எம்.பி. சசிகலா புஷ்பா அடுத்த நிமிடமே அ.தி.மு.கவின் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். தமிழக முதல்வரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளருமான ஜெயலலிதா இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அதிமுகவின் ராஜ்யசபா எம்.பியாக 2014இல் தேர்ந்தெடுக்கப்பட்ட சசிகலா புஷ்பா தொடர்ந்து பல்வேறு சர்ச்சைகளில் சிக்கியவர். குடிபோதையில் அ.தி.மு.க. நிர்வாகி ஒருவருடன் ஆபாசமாக பேசிய ஒடியோ ஒன்று வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. அப்போது அவர் மீது ஜெயலலிதா எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. பின்னர் தி.மு.கவின் ராஜ்யசபா எம்.பி. திருச்சி சிவாவுடன் மிக நெருக்கமாக இருக்கும் புகைப்படங்கள் பல வெளியாகி இருந்தன. அப்போது ஜெயலலிதா அமைதியாக இருந்து வந்தார்.

இது தொடர்பாக ஜெயலலிதாவிடம் சசிகலா புஷ்பா நேற்று விளக்கமளித்ததாக கூறப்பட்டது. இந்த நிலையில் நேற்று ராஜ்யசபாவில், பெண் எம்.பி.யான தமக்கு பாதுகாப்பு இல்லை; தாம் இராஜினாமா செய்யும் நெருக்கடிக்குத் தள்ளப்பட்டுள்ளேன் என்று கண்ணீர்மல்க பிரச்சினையை கிளப்பியிருந்தார் சசிகலா புஷ்பா.

ராஜ்யசபாவில் திங்கள் அதிமுக - திமுக

எம்.பிக்கள் மோதல் தொடர்பான விவகாரம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அப்போது பேசிய அதிமுக எம்.பி., சசிகலா புஷ்பா தனக்கு டில்லியில் பாதுகாப்பில்லை எனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது. எனக்கு அரசு பாதுகாப்பு அளிக்க வேண்டும். எனது புகாரில் தனிப்பட்ட பிரச்சினை ஏதுமில்லை. உணர்ச்சி வசப்பட்டு நடந்து கொண்டேனே தவிர அதில் உள்நோக்கம் ஏதும் இல்லை. அப்படி நடந்து கொண்டதற்காக திருச்சி சிவா மற்றும் திமுக தலைவரிடம் நான் மன்னிப்பும் கேட்டுக் கொள்கிறேன்.

அதிமுக பொதுச்செயலரும் முதல்வருமான ஜெயலலிதா தம்மை அறைந்ததாகவும் தமது எம்பி பதவியை ராஜினாமா செய்யுமாறு நிர்ப்பந்திப்பதாகவும் தாம் நாட்டுக்கு சேவையாற்ற விரும்புகிறேன் என்றும் சசிகலா புஷ்பா கூறினார்.

பெண்களுக்கு இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லாததால் நான் எனது பதவியை ராஜினாமா செய்கிறேன் என்றார். சசிகலா புஷ்பா கண்ணீர் மல்க பேசிய உடன், எம்.பி என்ற முறையில் அவருக்கு தேவையான அனைத்து பாதுகாப்பும் அளிக்கப்படும் என ராஜ்யசபா சபாநாயகர் குரியன் தெரிவித்தார். இதற்கிடையில் சசிகலாவின் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். இதனால் பெரும் சலசலப்பு ஏற்பட்டது.

இந்நிலையில், அதிமுக.,வின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து சசிகலா புஷ்பா நீக்கப்பட்டதாக அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். கடந்த 2 நாட்களுக்கு முன் டில்லி விமான நிலையத்தில் திமுக எம்.பி திருச்சி சிவா மற்றும் அதிமுக எம்.பி., சசிகலா புஷ்பா இடையே மோதல் ஏற்பட்டது.

அப்போது சசிகலா புஷ்பா, திருச்சி சிவாவை அறைந்துள்ளார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இச்சம் பவம் தொடர்பாக ஜெயலலிதா சசிகலா புஷ்பாவை அழைத்து விசாரித்தார். சசிகலா புஷ்பா மாநிலங்களவையில் பேசிக் கொண்டிருந்த வேளையிலேயே அவர் அதிமுகவின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக தகவல் வெளியானது. அதிமுக பொதுச் செயலாளரும், தமிழக முதல்வருமான ஜெயலலிதா இதற்கான உத்தரவை பிறப்பித்தார். கட்சி கட்டுப்பாட்டை மீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் அவர் நீக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

அர்தூகானை உயிருடன் பிடிக்க முயன்ற 11பேர் கொண்ட குழு மடக்கிப்பிடிப்பு

துருக்கியில் இருவாரங்களுக்கு முன், தோல்வியில் முடிந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியின் தொடக்கத்தில் ஜனாதிபதி ரஜப் தய்யிப் அர்தூகானை பிடிக்க முயன்றதாக சந்தேகிக்கப்படும் இராணுவ குழுவொன்றை துருக்கி சிறப்பு படையினர் பிடித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

துருக்கி ஜனாதிபதி அர்தூகான் தனது விடுமுறையைக் கழிக்க, மர்மாரிஸ் என்ற சுற்றுலா வாசஸ்தலத்தில் தங்கியிருந்த போது, அவ்விடத்துக்கு சட்டவிரோதமாக வந்திருந்த 11 இராணுவ கமாண்டோக்கள் பிடிபட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி நடைபெற்ற போது, இரகசியமாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து அந்த ஹோட்டலில் தங்கியிருந்த ஜனாதிபதி அர்தூகான் தப்பியோடினார்.

ஒரு காட்டுப்பகுதியில் பன்றிகளை வேட்டையாடிக் கொண்டிருந்த கிராமவாசிகள் சிலர் தப்பியோடிய படையினரை பார்த்ததை தொடர்ந்து, ஆளில்லா விமானங்கள் மற்றும் ஹெலி கொப்டர்களைக் கொண்டு அவர்களைக் கண்டு பிடித்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த நடவடிக்கையின் போது இரு தரப்பிலிருந்தும் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகவும், ஆனால், யாரும் இறக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டில் மாட்டு இரத்தம் குரைஷியின் வீடு இடிப்பு

மாட்டின் இரத்தம் காணப்பட்டதாக கூறப்பட்டு இந்தியாவில் உத்தரப் பிரதேசத்தில் முஸாஃபர் நகரை சேர்ந்த ஸீஷன் குரைஷி என்பரின் வீடு இந்துத்துவ வாதிகளால் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

ஸீஷன் குரைஷி என்பவரது வீட்டில் மாட்டின் இரத்த அடையாளங்கள் காணப்பட்டதை தொடர்ந்து அவர் மாட்டை அறுத்ததாக ஊரில் தகவல் பரவியது. இதனால் அவர் வீட்டுக்கு முன்னால் கலவரக்கும்பல் ஒன்றுகூடியது. இதனால் உயிருக்கு அஞ்சிய குரைஷி அங்கிருந்து தப்பியோடிவிட்டார். மேலும் கோபமுற்ற இந்துத்துவாதிகள் அவரது வீட்டை இடித்து தரைமட்டமாக்கினர்.

இதுகுறித்து பொலிஸ் அதிகாரி தீபக்குமார் கூறியதாவது;

குரைஷியின் வீட்டில் இருந்து இறைச்சியும், கன்றுக்குட்டியும், கத்தியும் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட இறைச்சி மாட்டிறைச்சி போல காணப்படுகிறது. தற்போது குறித்த பிரதேசத்தில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் உள்ளது என்றார்.

மாட்டை அறுத்தவர் மீதும் மாட்டிறைச்சி வைத்திருந்த குறைஷி மீதும் பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுக்கவில்லை என பி.ஜே.பி., பஜ்ரங்தள், வி.எச்.பி. போன்ற இந்துத்துவ அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொல்லப்பட்ட பாதிரியாரின் நினைவு வழிபாட்டில் முஸ்லிம்களும் பங்கேற்பு

பிரான்சில், தீவிரவாதிகளால் கொலைசெய்யப்பட்ட உள்ளூர் பாதிரியாரின் கொலை நடந்து ஐந்து நாட்களுக்கு பின்னர், மக்கள் நிறைந்திருந்த ரூவேங் பேராலயத்தில் நடைபெற்ற வழிபாட்டில் ரோமன் கத்தோலிக் கர்களுடன் நூற்றுக்கு அதிகமான முஸ்லிம்களும் பங்கேற்றுள்ளனர்.

இத்தகைய கொடூரத் தாக்குதலை முஸ்லிம்கள் ஏற்கவில்லை என்பதை காட்டும் வகையில், இந்த வழிபாட்டில் பங்கேற்க ஆலயங்கள் முஸ்லிம்களுக்கு அழைப்பு விடுத்திருந்தன.

பிரான்ஸை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய தீவிரவாத தாக்குதல்களில் மிகவும் சமீபத்திய தாக்குதலான இதனை முஸ்லிம்கள் ஏற்கவில்லை என்பதை காட்டும் விதமாக இந்த வழிபாட்டில் பங்கேற்க பிரான்ஸ் முழுவதுமுள்ள முஸ்லிம்களை தேவாலயங்கள் அழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிலந்தி (மருதமுனை) முஹம்மட் இஸ்ரத்

பாலம் (திகன) என்.எம். இம்தியாஸ்

புழு (முள்ளிப்பொத்தானை) பர்ஸானா ராபிக்

இலங்கை அபிவிருத்திகளை ஊக்குவிப்பதற்கு பாகிஸ்தான் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது

பாகிஸ்தானிய உயர் ஸ்தானிகர் சையத் சகில் ஹுசைன்

இலங்கையின் மனிதவள மூலதனம் போலவே தொழில் முயற்சியாண்மை அபிவிருத்திகளை ஊக்குவிப்பதற்கு பாகிஸ்தானிய அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றது என பாகிஸ்தானிய உயர் ஸ்தானிகர் சையத் சகில் ஹுசைன் தெரிவித்தார்.

இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் முழுமையான கணனி ஆய்வுகூடத்தினை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாகிஸ்தானிய அரசாங்கம் 15 கணனிகள், 5 மடிக்கணனிகள், தளபாடங்கள் உள்ளடங்கிய முழுமைப்படுத்தப்பட்ட கணனி ஆய்வுகூடத்தினை இலங்கையில் அமைந்துள்ள அதன் உயர் ஸ்தானிகர் காரியாலயத்தின் ஊடாக இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்திற்கு அன்பளிப்பு செய்தது.

பாகிஸ்தானிய பொருளாதாரம் தொடர்பாக முன்னணி சர்வதேச வெளியீடுகள், நிதி முகாமையாளர்கள் மற்றும் தரப்படுத்தல் முகவர்கள் உறுதியான மதிப்பீடுகளை வழங்கியிருக்கின்றனர் எனவும் அமெரிக்காவின் பங்கு குறிகாட்டி நிறுவனமான மோர்கன் ஸ்டேன்லி கெபிட்டல் இன்டர்நெஷனல் பாகிஸ்தான் வளர்ந்துவரும் சந்தை என வகைப்படுத்தியுள்ளமையானது சர்வதேச நிறுவனங்கள் பாகிஸ்தானின் பொருளாதார வளர்ச்சியின் மீது கொண்டுள்ள நம்பிக்கையினை எடுத்துக்காட்டுகின்றது எனவும் உயர் ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

மக்களுக்கு பயனுள்ள அணுசக்தி தொழில்நுட்ப நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட பல்வேறு விடயங்களில் பாகிஸ்தானிய விஞ்ஞானிகளின் ஈடுபடுவதற்கு அணுசக்தி ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய நிறுவனத்தின் இணை அங்கத்துவமானது அங்கிகாரத்தினை வழங்குகின்றது எனவும் பாகிஸ்தான் மருத்துவம், விவசாயம் மற்றும் மின்விநியோக திட்டங்கள் உட்பட சமாதான நடவடிக்கைகளுக்கு அணுசக்தி தொழில்நுட்பத்தினை பயன்படுத்தும் பொறுப்புள்ள அணுசக்தி நாடாக காணப்படுகின்றது என கூறினார்.

மேலும் பாகிஸ்தான் மிக விரைவில் பொருளாதார நடவடிக்கைகளின் கேந்திர மையமாக மாறும் எனக்கூறியதுடன் வணிக வாய்ப்புக்களை ஆய்வு செய்வதற்கு இலங்கை வர்த்தகர்களுக்கு இதன் பொழுது அழைப்பு விடுத்தார்.

இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனமானது பாகிஸ்தான் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கிடையில் வர்த்தக மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றமையினை பாராட்டியதுடன் தொழில் முனைவோருக்கான அபிவிருத்தி நிலையமான ஏமான் நிறுவனத்துடன் இணைந்து இருநாட்டவர்களும் பங்குபற்றிய தொழில் முயற்சியாண்மை குடும்ப வர்த்தகத்திற்கான பயிற்சி பட்டறைகளை ஒழுங்கு செய்வதற்கு மேற்கொண்ட முயற்சிகளை இதன்பொழுது பாராட்டினார்.

பல்கலைக்கழக தெரிவில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

புள்ளிவிபர அறிக்கையை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு இந்த வருடமும் கடந்த ஜூவில் வெளியிடு செய்திருந்தது.

மொத்தம் 25,576 மாணவர்கள் பல்கலைகழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். இதில் 2,073 பேர் முஸ்லிம் மாணவர்களாகும்.

மொத்தமாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் 8 வீதமான மாணவர்கள் முஸ்லிம்களாகும். இன்றைக்கு 50 வருடங்கள் முன்னர் மொத்த பல்கலைகழக மாணவர்களில் முஸ்லிம் மாணவர்களின் வீதம் இரண்டு வீதத்திலும் குறைவான அடைவுமட்டத்தை கொண்டதாக மிகப்பின் தங்கிய நிலமையில் காணப்பட்டது.

இலங்கை வரலாற்றில் மொத்தப் பல்கலைகழக மாணவர்களின் வீதத்தில் எட்டு வீதமான பங்கை முஸ்லிம் மாணவர்கள் பெற்றிருப்பது இலங்கை முஸ்லிம் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை எடுத்துக்காட்டும் முக்கியத்துமிக்க குறியீடாக நோக்கப்பட வேண்டியுள்ளது.

இன, மொழி, மத ரீதியான...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி சட்டத்தரணி பிரசன்ன லால்த அல்விஸ் தாக்கல் செய்த அடிப்படை மனுவொன்றை தள்ளுபடி செய்த பின்னர், நீதிபதிகள் இந்த உத்தரவை பிறப்பித்தனர்.

இதன்படி, இந்த மனுவில் பிரதிவாதிகளாக தமிழ் தேசிய கூட்டமைப்பு, பொதுபல சேனா அமைப்பு உட்பட இன மற்றும் மத ரீதியாக பதிவு செய்யப்பட்டுள்ள 27 அரசியல் கட்சிகள் குறிப்பிடப்பட்டிருந்தன.

இன மற்றும் மத ரீதியாக பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சி காரணமாக சமூகத்தில் நல்லிணக்கத்திற்கு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக இந்த மனுமூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனவே அவ்வாறான கட்சிகளை தடைசெய்யும்படி தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு இந்த மனுவில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் இவ்வாறான உத்தரவொன்றை பிறப்பிக்க உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரங்கள் இல்லை என்று தெரிவித்த தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் அரச தரப்பு சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், அதனை தள்ளுபடி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

எதிர்தரப்பின் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் மனுதாரர் முன்வைத்த காரணங்களில் நியாயமான சட்ட அடிப்படை இல்லாத காரணத்தினால் மனுவை விசாரணையின்றி தள்ளுபடி செய்யுமாறு உத்தரவிட்டனர்.

உம்ரா விசாவில் தங்கி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சவூதியில் இந்தவருடம் சுமார் 6 மில்லியன் யாத்திரிகள் புனித உம்ரா கடமைக்காக சவூதி அரேபியா சென்றுள்ளனர். தற்போது உம்ரா பருவகாலம் முடிவடைந்த பின்னர், வீசா காலக்கெடு முடிவதற்கு நாட்டிலிருந்து வெளியேற வேண்டுமென சவூதி அரேபியா அறிவித்துள்ளது.

வீசா முடிவடைந்து சவூதியில் சட்டவிரோதமாக தயங்கியிருப்பவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பவர்களுக்கு 1 இலட்சம் சவூதி றியால் வரை அபராதமும், 2 வருட சிறைத்தண்டனையும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சட்ட விரோத அடைக்கலம் கொடுப்பவர் வெளிநாட்டு பிரஜையாக இருக்கும்பட்சத்தில் தண்டனை காலத்துக்கு பின்னர் அவரது நாட்டுக்கு திரும்பயனுப்பப்படுவார் என்று சவூதி குடிவரவு, குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

நோயாளிகள் தகுந்த ஆவணங்களை வழங்கினால் மாத்திரம், அவர்களது வீசா காலம் வைத்தியசாலையிலிருந்து வெளியேறும் வரை நீடிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்புமுகாம்களில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செயலமர்வு கடந்த மாதம் 30ஆம் திகதி ஒட்டுச்சுட்டான் பகுதியில் இடம் பெற்றது.

இந்த அமர்வில் கலந்து கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவர், தாம் இறுதி நேர யுத்தத்தின் போது சரணடைந்து தடுப்பில் இருக்கும் காலத்தில் இரசாயணம் கலந்த உணவு வகைகள் வழங்கப்பட்டதாகவும், ஊசிகள் ஏற்றப்பட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அத்தோடு, அவ்வாறு ஊசி ஏற்றியதால் தன்னுடன் சரணடைந்து ஒருவர் அன்றைய நாள் இரவே உயிரிழந்தார் என்றும் சரணடைந்தோர் மிகவும் அச்சத்திலேயே அந்தக் காலத்தை கழித்தனர் என்றும் பகிரங்கமாக குற்றம் சுமத்தியிருந்தார்.

தமிழர் தரப்புக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள மேற்படிக் குற்றச்சாட்டு தொடர்பில் இராணுவப் பேச்சாளர் பிரகேடியர் ஜயவீரவிடம் நவமணி வினவியபோதே, மேற்கண்டவாறு அவர் மறுத்தார்.

அதாவது, எழு வருடங்கள் கழித்து தற்போது திடீரென ஒருவர், தடுப்பில் இருந்தபோது தமக்கு இரசாயண உணவு வழங்கப்பட்டதாக கூறியுள்ளார். இதனை நாம் எப்படி ஏற்றுக்கொள்வது?

இலங்கை இராணுவத்தினர் ஒருபோதும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கவே மாட்டார்கள். ஒரு விலங்குக்கேனும் விஷம் வைக்க தயங்கும் நாம் மனிதர்களுக்கு எப்படி செய்வோம்? இது எம்மீதான தேவையற்ற குற்றச்சாட்டாகும். இதனை நாம் முற்றாக நிராகரிக்கிறோம் என்றார்.

ஜனாஸா குளிப்பாட்டல் செயலமர்வு

ஜனாசாவை ஸுன்னாவின் அடிப்படையில் சரியான முறையில் குளிப்பாட்டல் மற்றும் அது சம்பந்தமான நேரான வழிகாட்டல்கள் அடங்கிய செயலமர்வு 12ஆம் திகதி இல. 2, போதேஜு அவனியு, பாடசாலை லேன், ஸ்டேஷன் வீதி, தெஹிவளையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கு டாக்டர் மரீனா தாஹாரிபாயினால், இலவசமாக நடத்தப்படுவதுடன் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நடத்தப்படும்.

கலந்துகொள்ள விரும்புவோர் 0777402020 இலக்கத்துக்கு குறுந்தகவலொன்றை அனுப்புவும்.

அஹதிய்யா மாணவர்களுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விரிவான பாடப் புத்தகங்களை தயாரித்து வெளியிட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அஹதிய்யா இறுதிப் பரீட்சைக்கான விரிவான பாடப் புத்தகங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பாடப் புத்தகம் அஹதிய்யா இறுதிப் பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்களுக்கும், தர்மாச்சார்ய பரீட்சை பரீட்சைக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

அதேபோன்று, 6-9 மாணவர்களுக்கு தயாரிக்கப்படவுள்ள விரிவான பாடப் புத்தகங்களும் மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்றும் திணைக்கள பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

உயர்தர பரீட்சை இன்று...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என்.ஜே. புஸ்பகுமார தெரிவித்தார்.

பரீட்சார்த்திகள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் தொடர்பிலும் பரீட்சையாளர் நாயகம் தெளிபடுத்தினார். பரீட்சை மு.ப. 8.30 ஆரம்பமாகுவதால் பரீட்சார்த்திகளை சரியாக மு.ப.8 மணிக்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு வருகை தருமாறும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கேட்டுக் கொண்டுள்ளார்.

பரீட்சார்த்திகள் பரீட்சை அனுமதிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டினை பரீட்சை மண்டபத்திற்குள் கட்டாயம் எடுத்துவருதல் அவசியமானதாகும். இம்முறை க.பொ.த உயர் தரப்பரீட்சையில் 3 இலட்சத்து 15 ஆயிரத்து 605 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளதுடன், இவர்களில் 2 இலட்சத்து 40 ஆயிரத்து 991 பேர் பாடசாலை பரீட்சார்த்திகள் எனவும், 74 ஆயிரத்து 614 பேர் வெளிவாரி பரீட்சார்த்திகள் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே.புஸ்பகுமார கட்டிக் காட்டினார்.

இதேவேளை, அனுமதிப்பத்திரங்களில் மாற்றங்கள் காணப்பட்டால் அது தொடர்பாக உடனடியாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்குமாறும் விண்ணப்பதாரிகளிடம் பரீட்சைத்திணைக்களம் கோரியுள்ளது. தாம் விண்ணப்பித்த பாடங்கள் மற்றும் மொழி தொடர்பாக நன்கு அவதானம் செலுத்துமாறு பரீட்சைகள் திணைக்களம் அறிவித்தது.

அனுமதிப்பத்திரத்தில் ஏதாவது பிரச்சினை காணப்பட்டால் அது தொடர்பான தகவல்களை பெற்றுகொள்ள விசேட தொலைப்பேசி இலக்கங்கள் அறிவிக்கப் பட்டுள்ளன.

0112784208, 0112784537 அல்லது 1911 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு இது தொடர்பில் மேலதிக விபரங்களை பெற்றுகொள்ளலாம்.

பரீட்சைகளில் ஸ்மார்ட் கடிகாரம் அணிவதற்கு தடை

பொதுப் பரீட்சைகளின் போது ஸ்மார்ட் கைக்கடிகாரத்திற்கு தடைவிதிப்பதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்படி இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ள க.பொ.த உயர்தரப்பரீட்சையின் போது அதற்கு தடைவிதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில பரீட்சைகளின் போது ஸ்மார்ட் கடிகாரத்திலுள்ள விசேட அம்சங்களை பயன்படுத்தி பரீட்சை மோசடிகளில் ஈடுபட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அதற்கான தடை விதிக்க தீர்மானித்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பரீட்சை மண்டபத்திலுள்ள மேற்பார்வையாளர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளதாகவும் இதன்போது யாரேனும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திற்குள் அதனை வைத்திருந்தால் அவருக்கு எதிராக நடவடிக்கையெடுக்கப்பட்டு அவரை அடுத்த 5 வருடங்களுக்கு எந்தவொரு பொதுப் பரீட்சையும் எழுத முடியாதவாறு தடைவிதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிரணி பாதயாத்திரை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மணிக்கு ஆரம்பமான இத்தப் பேரணியில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மஹிந்த, இந்த ஆர்ப்பாட்டமானது மிகவும் பெரியது. இவ்வாறானதொரு வரலாற்றுச் சிறப்பு மிகு ஆர்ப்பாட்டம் இனிமேல் இந்நாட்டில் இடம்பெறுமா என்பது சந்தேகமே. நாம் இந்த நான்கு நாட்கள், 100 மணித்தியாலங்கள் தெரிவித்த எதிர்ப்புக்கே இந்த அரசு அஞ்சியுள்ளதென்றால் தொடர்ச்சியாக எதிர்ப்பு வெளியிட்டால் என்ன ஆகும். இவ்வாறான இந்த பேரணியானது மதத்தை அடிப்படையாக கொண்டதன்றி மக்களுக்காகவே நடத்தப்படுகின்றது. எனவே இந்த அரசை இனியும் நம்பாது தொடர்ந்தும் மக்கள் எம்முடன் இணைந்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

எனினும், இந்த பேரணியானது கொழும்பில் எந்த இடத்தில் நிறைவுக்கு வரும் என்பது இறுதிவரையிலும் வெளியிடப்படாமலேயே இருந்தது. எதிரணியினர் ஏற்பாடு செய்திருந்த மைதானமும் கட்டுமானப் பணிகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தமையால் ஆர்ப்பாட்ட ஏற்பாட்டாளர்கள் குழப்பத்திலேயே இருந்தனர்.

இதனைத் தொடர்ந்து இந்தோனேசியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளும் முன்னர்அவரைத் தொலைப்பேசி ஊடாக தொடர்பு கொண்ட மஹிந்த எம்.பி., தங்களுக்கு ஒரு மைதானத்தை கொழும்புக்குள் ஒதுக்கித்தருமாறு கோரியுள்ளார். இதனால், பொரளையில் அமைந்துள்ள கெம்பல் மைதானத்தில் கூட்டத்தை நடத்துமாறு பொலிஸாரின் ஊடாக மஹிந்தவுக்கு நேற்றைய தினம் அபேராம விகாரையில் வைத்து அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு இருக்க நேற்று பிற்பகல் 4 மணியளவில் கொழும்பு எல்லையை வந்தடைந்த இவர்கள், பேஸ்லைன் வீதியூடாக தெமட்டகொட நகருக்குச் சென்று அங்கிருந்து பஞ்சிகாவத்தையூடாக மருதானைக்கு வருகைத்தந்து, கெம்பல் மைதானத்தில் பேரணியை நடத்தாது, பொலிஸாரின் உத்தரவையும் மீறி லிப்டன் சுற்றுவட்டத்தில் தமது இறுதிக் கூட்டத்தை நடத்தினர்.

இந்த பேரணியில் சுமார் நாற்பதாயிரம் முதல் ஐம்பதாயிரம் வரையிலான பொது மக்கள் கலந்து கொண்டனர் என்றும் பேரணி ஏற்பாட்டாளர்களால் கூறப்பட்டுள்ளது.

அத்தோடு, இதில் கலந்து கொண்டோர் மருதானையில் அமைந்துள்ள சுதந்திரக் கட்சித் தலைமையகத்தை கடக்கும் போது, இது மஹிந்தவின் இடம், மைத்திரிபால சிறிசேனவை விரைவில் நாம் வீட்டுக்கு அனுப்புவோம், மஹிந்த மீண்டும் வந்துவிட்டார், அவருடன் நாமும் விரைவில் வருவோம், தற்போது இந்தக் கட்சி ஜனாதிபதி சிறிசேனவின் ஆப்பக் கடைப் போன்று இருக்கின்றது என்று கோஷங்களை எழுப்பி, பட்டாசு கொளுத்தி பரபரப்பிலும் ஈடுபட்டனர்.

இதனை அவதானித்துக் கொண்டிருந்த சுதந்திரக் கட்சியின் எதிரணி உறுப்பினரான டலஸ் அழகப்பெரும எம்.பி, இந்த செயற்பாடுகளில் ஈடுபட்டோரை சமாதானப்படுத்தி கலைந்து செல்லுமாறு அறிவுறுத்தினார்.

இதுபோன்ற சில சிக்கல்களை அடுத்து மாலை 5.30 மணியளவில் லிப்டன் சுற்றுவட்டத்தை வந்தடைந்த இவர்கள் தனது ஐந்துநாள் அரச எதிர்ப்பு பேரணியை முடித்துக்கொண்டனர்.

அதேநேரம், நேற்றைய தினத்தில் கொழும்பு- பேஸ்லைன், கொழும்பு-பஞ்சிகாவத்தை, கொழும்பு- மருதானை, கொழும்பு- கிரிபத்கொட ஆகிய வீதிகளில் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டு பொது மக்கள் கடும் சிரமத்துக்கு ஆளாகினர் என்பதும் கொழும்பில் பொலிஸாரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரித்துக் காணப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

வர்த்தக பிரமுகர் காலமானார்

ஹெம்மாதகம பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர் அல்ஹாஜ் எம்.எச்.எம் யூசுபின் சகோதரர் தும்புளுவாவையை சேர்ந்த வர்த்தக பிரமுகர் அல்ஹாஜ் எம்.எச்.எம். நிலாம்டீன் நேற்று மாரடைப்பினால் காலமானார். ஜனாஸாவொன்றில் கலந்துகொண்டு திரும்பி வரும் வழியில் மாரடைப்பு ஏற்பட்டே இவர் மரணமானார். ஜனாஸா நல்லடக்கம் இன்று காலை ஹெம்மாதகமையில் நடைபெறும்.

எதிரணி எம்.பிகளுக்கான...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உத்தரவினை மீறி மத்திய வங்கியின் ஆளுநருக்கு எதிர்ப்பு வெளியிட்டதன் காரணமாக இந்த உத்தரவினை பிறப்பிக்குமாறு பொலிஸார் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி, பாராளுமன்ற உறுப்பினர்களான தினேஷ் குணவர்தன, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, பந்துல குணவர்தன, நாமல் ராஜபக்ஷ , மஹிந்தானந்த அளுத்கமகே,ஜொன்ஸ்டன் பெர்ணான்டோ, பிரசன்ன ரணதுங்க,ரோஹித அபேகுணவர்தன ,ஸ்ரீயானி விஜயவிக்ரம, ரஞ்சித் சொய்சா ஆகிய எதிரணி உறுப்பினர்களே இவ்வாறு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கூட்டு எதிர்க்கட்சியினரின் பாதயாத்திரையின் இறுதி நாளான நேற்றைய தினம், குறித்த 11 உறுப்பினர்களில் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் நீதிமன்றில் ஆஜரானதுடன், ஏனையவர்களால் அதில்பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அம்பியூலன்ஸில் பஷில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வண்டியில் இருந்த முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷவை நீதவான் வருகை தந்து கண்காணித்ததன் பின்னர் விளக்கமறியல் நீடிப்பு உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கடந்த மஹிந்த ஆட்சிக் காலத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இருந்த திவிநெகும நிதியத்திற்குரிய நிதியை பயன்படுத்தி பிளாஸ்டிக் குழாய்களை கொள்வனவு செய்ததில் இடம் பெற்ற மோசடி தொடர்பில் கடந்த மாதம் 18ஆம் திகதி பசில் ராஜபக்ஷ நிதி மோசடி விசாரணைப் பிரிவால் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட இவர் கடுவலை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தார். இந்நிலையில் நேற்று மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்ட நிலையில் அவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் தம்மிக்க ஹேமபால உத்தரவிட்டுள்ளார்.

திவிநெகும நிதியத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் பசில் ராஜபக்ஷ கைதுசெய்யப்படுவது இது இரண்டாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தை அடுத்து ஜனவரி 10 ஆம் திகதி உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறிய பசில் ராஜபக்ஷ, மீண்டும் 2015ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி நாடு திரும்பியிருந்தார்.இதனையடுத்து மறுநாளான 2015 ஏப்ரல் 22ஆம் திகதி திவி நெகும நிதியத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் நிதியத்தின் ஆணையாளர் உட்பட மூவருடன் பசில் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டிருந்தார். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த அவர் கடந்த மே மாதம் 12ஆம் திகதி மாத்தறை காணி விவகாரம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு மாத்தறை நீதிமன்றில் நிறுத்தப்பட்டு அன்றைய தினமே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.இதனையடுத்து 2016 யூன் மாதம் 6ஆம் திகதி கம்பஹா மாவட்டத்திலுள்ள காணி விவகாரம் தொடர்பில் மீண்டும் கைதுசெய்யப்பட்ட பசில் ராஜபக்ஷவிற்கு பிணை வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே நான்காவது தடவையாக பசில் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, திவிநெகும அபிவிருத்தி திணைக்கள நிதி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பசில் ராஜபக்ஷ மற்றும் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் செயலாளர் நாயகம் கித்சிறி ரணவக்க ஆகியோர் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிணை மனு எதிர்வரும் 8ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

பிளாஸ்டிக் குழாய்களை கொள்வனவு செய்ததில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்ட பசில் ராஜபக்ஷ, தமக்கு பிணை வழங்குமாறு கோரி கடுவலை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டது.

பிணை மனு நிராகரிக்கப்பட்டதை சவாலுக்கு உட்படுத்தி கொழும்பு உயர் நீதிமன்றத்தில் மீளாய்வு மனு தாக்கல் செய்திருந்த நிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது பசில் ராஜபக்ஷ மற்றும் கித்சிறி ரணவக்க ஆகியோரின் பிணை மனு தொடர்பில் எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் சட்டமா அதிபர், நிதி குற்ற விசாரணைப் பிரிவின் பணிப்பாளர், பயங்கரவாத தடுப்பு பிரிவினர், பொலிஸ் மா அதிபர் ஆகியோரை ஆட்சேபனைகளை தாக்கல் செய்யுமாறு கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி எம்.சி.பி. எஸ். மொறாயஸ் தெரிவித்தார்.

Sports
விளையாட்டுச் செய்திகள்

ஹேரத், மெண்டிஸ் மீண்டும் முன்னேற்றம்

இலங்கை - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் பல்லேகலேயில் நடைபெற்றது. இதில் இலங்கை அணி அவுஸ்திரேலியாவை 106 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இவ்வெற்றிக்கு சுழற்பந்துவீச்சாளரான ரங்கன ஹேரத்தும் முக்கிய காரணமாக இருந்தார். முதல் இனிங்ஸில் 49 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 4 விக்கட்டுக்களைக் கைப்பற்றிய அவர், 2ஆவது இனிங்ஸில் 54 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 5 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

இந்நிலையில், 9 விக்கட்டுகளைக் கைப்பற்றியதால் ஐ.சி.சி.யின் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இடத்திற்கு தற்போது அவர் 749 புள்ளிகளுடன் அந்த இடத்தைப் பிடித்துள்ளார். அத்துடன் இப்போட்டியில் அறிமுகமாகி 7 விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்திய இளம் வீரர் லக்ஷான் சந்தகன் தரவரிசையில் 58ஆவது இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளார். இதன்படி, இந்திய வீரர் அஸ்வின் 876 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், இங்கிலாந்தின் ஆண்டர்சன் 875 புள்ளிகள் பெற்று 2ஆவது இடத்திலும், ஸ்டுவர்ட் பிரோட் 852 புள்ளிகள் பெற்று 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

இதேவேளை, துடுப்பாட்டத்தில் 176 ஓட்டங்களைக் குவித்த இளம் வீரர் குசல் மெண்டிஸ் 48ஆவது இடத்திலிருந்து 27 இடங்கள் முன்னேறி 21ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.மேலும் இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மெத்யூஸ் 13ஆவது இடத்திலும், தினேஷ் சந்திமால் 20ஆவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்டில் பிரகாசிக்கத் தவறிய டேவிட் வோர்னர், ஜோ பேர்ன்ஸ், உஸ்மான் கவாஜா தரவரிசையில் பின்தங்கியுள்ளனர். ஸ்டீவன் ஸ்மித் அரைச்சதம் அடித்தன்மூலம் துடுப்பாட்டத் தரவரிசையில் தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறார்.இதில் இங்கிலாந்தின் ஜோ ரூட் 2-வது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சதிப்புரட்சியின் எதிரொலி:

துருக்கி கால்பந்து கூட்டமைப்பு உறுப்பினர்கள் இராஜினாமா

துருக்கி கால்பந்து கூட்டமைப்பின் அனைத்து அங்கத்தவர்களும் உடன் அமுலுக்குவரும் வகையில் இராஜினாமாச் செய்துள்ளதாக அந்நாட்டு கால்பந்து கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

துருக்கியில் கடந்த 15ஆம் திகதி இரவு இராணுவத்தில் ஒரு பிரிவினர் திடீர் புரட்சிக்கு முயற்சித்தனர். இருப்பினும் அந் நாட்டின் ஜனாதிபதி அர்துகான் அழைப்பை ஏற்று வீதிகளில் இறங்கிய மக்கள் இராணுவ கிளர்ச்சியாளர்களை எதிர்த்துப் போராடினர். முடிவில் இராணுவ புரட்சி முயற்சி முறியடிக்கப்பட்டது.இந்த மோதல்களில் மக்களில் 290 பேர் உயிரிழந்ததுடன் 1,440 பேர் படுகாயமடைந்தனர்.இராணுவ புரட்சியில் ஈடுபட்டதாக தளபதிகள் உட்பட சுமார் 6000 பேர் கைது செய்யப்பட்டதுடன், அந்நாட்டின் முப்படை, நீதித்துறை, சிவில் நிறுவனங்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் உள்ளிட்ட வையைச் சேர்ந்த சுமார் 60, 000 பேர் சதி முயற்சி குற்றச்சாட்டில் இடைநீக்கப்பட்டதுடன்,விசாரணைகளும் இடம்பெற்றுவருகின்றன.

இந்நிலையில் தற்போது துருக்கி அரசாங்கத்தினால் இச்சதிப் புரட்சியில் ஈடுபட்டவர்களை இனங்கண்டு அவர்களை பதவிகளில் நீக்கவும், கைது செய்யவும் நடவடிக்கை எடுத்துவருகின்ற நிலையில், நாடு தழுவிய பாதுகாப்பு குறித்த விசாரணைகளுக்காக நிறுவப்பட்டுள்ள சபைக்கு பங்களிப்பு செய்யும் நோக்கில் இவ்வாறு அந்நாட்டு கால்பந்து கூட்டமைப்பு அங்கத்தவர்கள் இராஜினாமாச் செய்துள்ளனர்.

இதன்படி, துருக்கி கால்பந்து கூட்டமைப்பின் தலைவர், அங்கத்தவர்கள், போட்டி ஏற்பாட்டுக்குழு, அனுசரணை நிறுவனங்கள் மற்றும் கூட்டமைப்புடன் தொடர்புடைய 11 உறுப்பு அங்கத்தவ நிறுவனங்கள் தொடர்பில் குறித்த விசாரணைகள் சபைக்கு அனைத்து தகவல்களும் வழங்கப்பட்டுள்ளதாகத் அந்நாட்டு கால்பந்து கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

சவூதி வீரருக்கு ஒலிம்பிக் தடை

சவூதி அரேபியாவின் 28 வயதான நட்சத்திர குறுந்தூர வீரர் யூசுப் அஹ்மட் மஸ்ரஹீக்கு இம்முறை றியோ ஒலிம்பிக்கில் பங்குபற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. ஊக்கமருந்து பயன்படுத்தியமை கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து யூசுப் அஹ்மட்டுக்கு இவ்வாறு சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தால் தடை விதிக்கப்பட்டது.

கடந்த வருடம் சீனாவில் நடைபெற்ற உலக மெய்வல்லுனர் போட்டிகளில் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் புதிய சாதனை படைத்த அவர், கடந்த ஜுன் மாதம் சவூதி அரேபிய மெய்வல்லுனர் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஊக்கமருந்து பரிசோதனையின் அறிக்கையின் பிரகாரம் குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார்.இந்நிலையில் சர்வதேச தடகள சம்மேளனம் மற்றும் சவூதி அரேபிய மெய்வல்லுனர் சங்கம் ஆகியன யூசுப் அஹமட்டுக்கு இம்முறை ஒலிம்பிக்கில் பங்குபற்ற முடியாது என அறிவித்துள்ளது.

இந்நிலையில், கடந்த காலங்களில் மத்திய கிழக்கு உள்ளிட்ட முஸ்லிம் நாடுகளில் ஊக்கமருந்து பயன்படுத்திய குற்றச்சாட்டில் 7 வீரர்கள் இனங்காணப்பட்டதுடன், அவர்களுக்கு போட்டித் தடையும் விதிக்கப்பட்டது.இதில் மொரோக்கோவைச் சேர்ந்த 3 வீரர்களும் உள்ளடங்குவதுடன், எகிப்து, அல்ஜீரியா, பஹ்ரைன் மற்றும் டியுனீசியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த வீரர்களும் அடங்கும்.

இதேவேளை, றியோ ஒலிம்பிக் போட்டிக்கான சவூதி அரேபியா அணியில் முதற்தடவையாக 4 பெண்கள் இடம் பெற அந்த நாட்டு ஒலிம்பிக் கவுன்சில் அனுமதி அளித்தையடுத்து, ஒரு பழைமைவாத வளைகுடா நாடொன்று இவ்வாறு பெண்கள் அணியொன்றை ஒலிம்பிக் போட்டிகளுக்கு அனுப்புவது இதுவே முதற்தடவையாக அமையவுள்ளது.இதன்படி றியோ ஒலிம்பிக்கில் சவூதி அரேபியா சார்பாக 7 வீரர்களும், 4 வீராங்கனைகளும் கலந்துகொள்ள வுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டி நிந்தவூர் வீரர் புதிய சாதனை!

(நிந்தவூர் - சுலைமான் றாபி)

2016ஆம் ஆண்டிற்கான கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் வீரர் எம்.ஐ.எம். அசான் 21 வயதிற்குற்பட்ட ஆண்கள் பிரிவில் மூன்று தங்கப்பதக்கங்களை வென்றதோடு, புதிய சாதனையும் நிலைநாட்டி சம்பியனாகவும் தெரிவானார்.

கடந்த ஜூலை மாதம் 27ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை கந்தளாய் லீலாரத்ன பொது மைதானத்தில் இடம் பெற்ற இம்மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியின் போதே எம்.ஐ.எம். அசான் மூன்று வெவ்வேறு நிகழ்ச்சிகளில் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார். அவற்றுள் 21 வயது ஆண்கள் பிரிவு குண்டுபோடுதலில் 11.32 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும், முப்பாய்ச்சலில் 13.70 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், பரிது வட்டம் வீசுதலில் 29.74 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டதோடு, இப்பிரிவின் மாகாண சம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இது தவிர, கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் முப்பாய்ச்சலின் சாதனைப் பதிவாகக் காணப்பட்ட 12.87 மீற்றர் எனும் பழைய சாதனையை முறியடித்து, முப்பாய்ச்சலில் 13.70 மீற்றர் தூரம் எனும் புதிய சாதனையை கல்முனை கல்வி வலயம் சார்பாகவும், நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை சார்பாகவும் பதிவு செய்து பெருமை சேர்த்துள்ளதோடு, தான் அங்கம் வகிக்கும் நிந்தவூர் லகான் விளையாட்டுக்கு கழகத்திற்கும் பெருமையினை சேர்த்துள்ளார். மேலும் இதே பாடசாலையினைச்சேர்ந்த ஏ.ஏ. ஆதிப் அஹமட், 17வயது ஆண்கள் பிரிவு முப்பாய்ச்சலில் 11.73 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப் பதக்கம் ஒன்றினையும் பெற்றுக்கொண்டதோடு, இவ்வீரர்களின் விளையாட்டுத் திறமைக்காக இப்பாடசாலையின் அதிபர் எஸ்.எம்.எம். ஜாபிர், உடற்கல்வி ஆசிரியர்களான ஏ. ஹலீம் அஹமட், எம்.பி. மஹ்ரூப், ஏ.பி நளீம், ஏ.சி. நவாஸ் மற்றும் எச். ஜெமீன் ஆகியோர்கள் தங்களது பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

ஆசிய ரக்பி வரலாற்றில் இலங்கைக்கு சாதனை வெற்றி

(பி.எப்.எம் றிஷாட்)

மலேஷியாவில் கடந்த வாரம் நடைபெற்ற ஜோஹார் செவன்ஸ் 20 வயதுக்குட்பட்ட அணிக்கு எழுவர் ஆசிய றக்பி முதலாம் கட்டப் போட்டியில் கெவின் டிக்சன் ஜோசப் தலைமையிலான இலங்கை அணி சம்பியனானது.தென் கொரியாவுக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் 38-0 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலங்கை வெற்றி பெற்று சம்பியனானது.20 வயதுக்குட்பட்ட அணிக்கு எழுவர் ஆசிய றக்பி போட்டி ஒன்றில் இலங்கை முதற்தடவையாக சம்பியனானதுடன், ஆசியாவில் முதற்தடவையாக றக்பி போட்டியொன்றில் சம்பியன் பட்டம் வென்ற முதற்தடவை இதுவாகும்.

இத்நிலையில் விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் இலங்கை சார்பாக ப்ரியன்த நாணயக்கார (2), கெவின் டிக்சன் ஜோசப், நிஷோன் பெரேரா, ஓமல்க குணரட்ன, விமுக்தி குமாரசிங்க ஆகியோர் ட்ரைகளை வைத்தனர்.அவற்றில் 3 ட்ரைகளுக்கான மேலதிகப் புள்ளிகளை கெவின் டிக்சன் ஜோசப்பும் ஒரு ட்ரைக்கான மேலதிகப் புள்ளிகளை துவான் ஷம்ரி பூராவும் பெற்றுக் கொடுத்தனர்.இதற்கு முன்பதாக அரையிதிப் போட்டியில் மலேஷியாவை 29-14 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலங்கை வெற்றி கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சனிக்கிழமை ஆரம்பமான இச் சுற்றுப் போட்டியில் குழு பியில் இடம்பெற்ற இலங்கை, ஆரம்பப் போட்டியில் பிலிப்பைன்ஸை 22-5 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டிருந்தது.தொடர்ந்து தாய்லாந்தை 31-5 என துவம்சம் செய்த இலங்கை, அன்றைய தினம் ஜப்பானிடம் கடைசி நிமிடத்தில் 14-19 என தோல்வி அடைந்தது.எனினும் இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் காலை தனது கடைசி லீக் போட்டியில் ஹொங் கொங் செவன்ஸை 45-5 என்ற புள்ளிகள் கணக்கில் துவம்சம் செய்து அரை இறுதிக்கு முன்னேறியிருந்தது.

சம்பியனான 20 வயதுக்குட்பட்ட இலங்கை அணியில் கெவின் டிக்சன் ஜோசப் (தலைவர்), மொஹமத் தாரிக் சாலிஹ், நிஷோன் பெரேரா, துவான் ஷம்ரி பூரா, லசிது கருணாதிலக்க, ஓமல்க குணரட்ன, துவான் ரீலா ரம்பாய்தீன், அசித்த கயஷான், குசல் சமரதுங்க, ருமேஷ் சில்வா, புத்திமா பியரத்ன, விமுக்தி குமாரசிங்க ஆகியோர் இடம் பெற்றனர்.

இப் போட்டிகளின் இரண்டாம் கட்டமான ஹொங் கொங் செவன்ஸ் எதிர்வரும் 13 மற்றும் 14ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

லேமனின் பதவிக்காலம் நீடிப்பு

அவுஸ்திரேலிய கிரிக்கட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக டேரன் லேமனின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு உலகக்கிண்ண தொடர்வரை அவுஸ்திரேலிய அணியின் பயிற்சியாளராக அவர் நீடிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.அவுஸ்திரேலிய அணியின் பயிற்சியாளராக இருந்த மிக்கி ஆர்தருக்கு பதிலாக கடந்த 2013 ஆம் ஆண்டு டேரன் லேமன் நியமிக்கப்பட்டார். இவருடைய பதவிக்காலம் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துடன் நிறைவடைகின்ற நிலையில் மேலும் மூன்று வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 2019 ஆம் ஆண்டு ஆஷஸ் தொடர் மற்றும் உலகக்கிண்ண தொடர் வரை அவுஸ்திரேலிய அணியில் டேரன் லேமன் பயிற்சியாளராக நீடிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் நடாத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சோபர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இரண்டாமிடத்தை ஒலுவில் லோயல் விளையாட்டுக் கழகம் பெற்றுக்கொண்டது.கடந்த சனிக்கிழமை அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் கழகத்தின் தலைவர் எம்.ஐ முஹம்மட் நபீல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.முஹம்மட் நஸீர் கலந்து கொண்டு இச்சுற்றில் வெற்றிபெற்ற அணிக்கு பணப்பரிசிலையும், கிண்ணத்தையும் வழங்கி வைத்தார்.இரண்டாமிடம் பெற்ற அணிக்குரிய கிண்ணத்தை கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்த அக்கரைப்பற்று மக்கள் வங்கியின் முகாமையாளர் எஸ்.எம்.இமாமுதீன் வழங்கி வைத்தார்.இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் யு.எம்.வாஹிட், பொதுசனத் தொடர்பு அதிகாரி எம்.ஐ.எம்.நயீம், , அட்டாளைச்சேனை முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம்.உவைஸ், அம்பாறை மாவட்ட மெய்வல்லுநர் பயிற்றுவிப்பாளர் எஸ்.எல்.தாஜூதீன், அட்டாளைச்சேனை மரைக்காயர் சபைத் தலைவர் எஸ்.எல்.எம்.இஸ்மாயில் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (எஸ்.எம்.அறூஸ்)

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 02ND AUGUST 2016